



பத்து மிருகங்கள் — ஒவ்வொன்றும் தன் கதையைத் தானே கூறுகிறது. வெட்டி ஒட்டும் வண்ணப் படங்கள் கொண்டது.

# எங்கள் கதையைக் கேளுங்கள்

## குழந்தைக் கவிஞர்

# எங்கள் கதையைக் கேளுங்கள்

குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை-1.

Tamil

ENGAL KATHAYAI-K-KELUNKAL

(Stories of ten animals told by themselves.)

| | |
|---|---|
| Author : | Al. Valliappa |
| Illustrators : | Sagar & Vajravelu |
| Publishers : | Kulandai Puthaka Nilayam, Madras-17. |
| Sole Distributor : | Paari Nilayam, Madras-1 |
| Printer : | Jeevan Press, Madras-5 |
| Second Edition : | March '67. |
| Price : | Rs. 2/- |

வெளியிட்டோர் :

குழந்தைப் புத்தக நிலையம்

சென்னை-17.

விலை ரூ. 2/-

# மிருகங்கள் பேசினால்...?

பஞ்ச தந்திரக் கதைகளிலே, ஈசாப் கதைகளிலே மிருகங்கள் பேசுகின்றன. வேறு சில கற்பனைக் கதைகளிலும் மிருகங்கள் பேசலாம். ஆனால், உண்மையிலே மிருகங்கள் நம்மைப் போல் பேசுமா? 'பேசாது' என்பதுதான் எல்லோருக்கும் தெரியுமே!

மிருகங்களுக்குப் பேசும் சக்தி இருந்தால்...?

ஒவ்வொன்றும் தன்னுடைய கதையைத் தானே நமக்குக் கூறுமல்லவா? அவைகளுக்குப் பேசும் சக்தி இல்லாததால், அவைகளுக்குப் பதிலாக, அவை கூறுவதுபோல் இப்புத்தகத்தில் நான் கூறியிருக்கிறேன். மொத்தம் பத்து மிருகங்களின் கதைகளை நீங்கள் படிக்கப் போகிறீர்கள்.

"ஆமாம், இந்த மிருகங்களைப் பற்றியெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றுதானே கேட்கிறீர்கள்?

சிங்கம் ஒரே தடவையில் மூன்று, நான்கு குட்டிகள் கூடப் போடும் என்பதை நான் 'கிர்' வனப் பகுதிக்குப் போய்த் தெரிந்துகொண்டு வந்தேனா?

அல்லது,

கங்காருவின் குட்டி பிறந்தவுடன் ஓர் அங்குல உயரம் தான் இருக்கும் என்பதை ஆஸ்திரேலியாவுக்குப் போய் அறிந்துகொண்டு வந்தேனா?

அல்லது,

நீர்யானை தன் கோரைப் பற்களால் முதலையின் முதுகு ஓட்டைக்கூடக்கடித்து நொறுக்கிவிடும்என்பதை ஆப்பிரிக்கா வுக்குப் போய் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்தேனா?

அங்கெல்லாம் நான் போனதே இல்லை.

மிருகங்களைப் பற்றி ஆங்கிலத்தில் எத்தனை, எத்தனையோ புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. அவற்றில் பலவற்றைப் படித்தேன். படித்து, இந்தப் பத்து மிருகங்களைப் பற்றித் தெரிந்து கொண்டேன். அத்துடன், சென்னை மிருகக் காட்சி சாலைக்கும் இருமுறை போய் வந்தேன். அங்கேயுள்ள சில மிருகங்களை நேரில் பார்த்தேன். அங்கு வேலை பார்க்கும் நண்பர்கள் மூலமாகவும் சில செய்திகளைத் தெரிந்து கொண்டேன். பிறகு எழுதத் தொடங்கினேன்.

கையெழுத்துப் பிரதி தயாரானது. மிருகங்களைப் பற்றி நன்கு தெரிந்த ஒரு நிபுணர் அதைப் பார்வையிட்டால் நன்றா யிருக்குமே என்று நினைத்தேன். அதற்கு முற்றிலும் தகுதி வாய்ந்த ஒருவர் எனக்குக் கிடைத்தார். அவர்தாம் தமிழ் நாட்டு வனவிலங்கு அதிகாரி திரு. எம். ஏ. பாட்சா அவர்கள் (M. A. Badshah, State Wild Life Officer, Madras).

அவர் வனவிலங்குகளைப் பற்றி நன்றாக அறிந்தவர்; வெளி நாடுகளுக்குப் போய் வந்தவர்; மிகுந்த உற்சாகம் உள்ளவர்; குழந்தைகளுக்கு மிருகங்கள், பறவைகளைப் பற்றியெல்லாம் வண்ணப் படங்களுடன் நிறையப் புத்தகங்கள் வெளிவர வேண்டும் என்று ஆசைப்படுபவர். அவருக்குப் பல வேலைகள். ஆனாலும், கையெழுத்துப் பிரதியைப் பரிசீலனை செய்து பயனுள்ள பல யோசனைகளைக் கூறினார். அவருக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

சென்னை மிருகக் காட்சி சாலையாருக்கும், எனக்கு உதவியாயிருந்த ஆங்கில நூலாசிரியர்கள், பதிப்பாளர் களுக்கும் நன்றி.

சென்னை—17
10—11—62

அழ. வள்ளியப்பா



"பன்றி பல குட்டி, சிங்கம் ஒரு குட்டி"

—இப்படி ஒரு பழமொழியை நீங்கள் அடிக்கடி கூறிவருகிறீர்கள். உங்களில் யாரோ ஒருவர் எப்போதோ இதைச் சொல்லிவைத்திருக்கிறார். அதையே நீங்களும் திரும்பத் திரும்பக் கூறிவருகிறீர்களே!

'பன்றி பல குட்டி' என்பது சரிதான். ஆனால், 'சிங்கம் ஒரு குட்டி' என்பதுதான் தவறு. ஒரே பிரசவத்தில், மூன்று, நான்கு குட்டிகள்கூட எங்கள் இனத்தில் பிறக்கும்.

என்னையே எடுத்துக்கொள்ளுங்களேன். என் அம்மா என்னையும் என் தங்கையையும் ஒரே தடவையில்தான் பெற்றாள். முதலில் நான் பிறந்

தேன். சிறிது நேரத்தில் என் தங்கை பிறந்தாள். நாங்கள் இருவரும் கர்ப்பத்திலே 120 நாட்கள் இருந்தோம்.


நான் பிறந்து ஒரு வாரம் வரை எனக்குக் கண் தெரியவில்லை. கண் தெரிந்ததும், என் உடம்பை நானே ஒரு முறை பார்த்துக்கொண்டேன். என் உடம்பு முழுதும் மங்கலான சிறுசிறு புள்ளிகள் இருந்தன. ஆனால், என் அம்மாவுக்கோ அப்பாவுக்கோ அந்த மாதிரிப் புள்ளிகள் இல்லை. என் தங்கையின் உடம்பைப் பார்த்தேன். அவளுக்கும் என்போல் புள்ளிகள் இருந்தன. இதைப் பற்றி அம்மாவிடம் கேட்டேன். "குட்டியாக இருக்கும் போது இப்படித்தான் இருக்கும். நாள் ஆக ஆக மறைந்துவிடும்" என்று அம்மா பதில் சொன்னாள்.

என்னிடத்திலும், என் தங்கையிடத்திலும் என் அம்மாவுக்குப் பிரியம் அதிகம். எங்கள் மேல் உயிரையே வைத்திருப்பாள். அம்மாவும் அப்பாவும் வேட்டைக்குப் புறப்பட்டுப் போகும்போது, "நாங்கள் திரும்பி வரும்வரை இங்கேயே இருக்க வேண்டும். வெளியிலே தலை காட்டக் கூடாது" என்று எச்சரித்துவிட்டுத்தான் அம்மா போவாள்.

மூன்று மாதங்கள் வரை அம்மா எங்களுக்குப் பாலூட்டி வளர்த்தாள். அப்புறம், அம்மா கொண்டுவந்து கொடுத்த ஆகாரத்தைத் தின்று வளர்ந்து வந்தோம். மான் குட்டி, முயல் குட்டி, காட்டுப் பன்றி இவைகளைத்தான் அம்மா அடிக்கடி கொண்டு வருவாள்.

எனக்கும் என் தங்கைக்கும் கொஞ்சம் விவரம் தெரிந்தவுடனே, அம்மா எங்களை அருகிலே அழைத்தாள். "குழந்தைகளா, இன்று முதல் உங்

களுக்கு, வேட்டையாடுவது எப்படி என்பதைக் கற்றுக்கொடுக்கப் போகிறேன்'' என்று சொன்ஞள்.



''அப்படியா அம்மா! சரி, நாங்கள் தயார். புறப்படலாமா?'' என்று நான் கேட்டேன்.

அம்மா எங்களை அழைத்துக்கொண்டு வெளியிலே போஞள். மறைவான ஓர் இடத்தில் நின்றுகொண்டிருந்தோம். அப்போது சிறிது தூரத்தில் ஒரு முயல் குட்டி துள்ளிக் குதித்துக்கொண்டு சென்றது. உடனே அம்மா என்னைப் பார்த்து, ''நீ ஆண் பிள்ளை. முதலில் நீதான் ஆரம்பிக்க வேண்டும். அதோ, அந்த முயலை நீ துரத்திப் பிடிக்க வேண்டும். எங்கே, பிடி பார்க்கலாம்'' என்று கூறிஞள்.

உடனே நான் முயல் குட்டியை நோக்கித் தாவினேன். அது வெகு வேகமாக ஓடியது. ஆனால், நானா விடுவேன்? துரத்திச் சென்று ஒரே பாய்ச்சலில் அதன்மேல் பாய்ந்தேன். கழுத்தைப் பிடித்துப் பலமாகக் கடித்தேன். அவ்வளவுதான்; முயல் குட்டியின் மூச்சு நின்றுவிட்டது!

"சபாஷ், இப்படித்தான் வேட்டையாட வேண்டும். முயல், மான் முதலிய மிருகங்களாக இருந்தால், குரல்வளையில் கடித்துக் கொல்ல வேண்டும். ஆனால், காட்டு எருமை போன்ற பெரிய மிருகங்களை எப்படித் தாக்கவேண்டும், தெரியுமா? 'லபக்'கென்று மேலே பாய வேண்டும். உடனே பலமாகப் பிடரியிலே கடித்துக் கழுத்தை முறிக்க வேண்டும்" என்றாள் என் அம்மா.

"ஓ, அப்படியா! சரி அம்மா. இப்போது இந்தப் பக்கமாக ஒரு காட்டு எருமை வரட்டும். நான் அதை என்ன பாடு படுத்துகிறேன், பார்" என்றாள் என் தங்கை.

"என்ன! அது அவ்வளவு எளிதான காரியமா? நானும், உங்கள் அப்பாவும் சேர்ந்து தாக்கினால் கூட சில சமயம் காட்டு எருமை தப்பித்துக் கொண்டுவிடுமே! காட்டு எருமை பொல்லாதது. அதனிடம் இப்போது போகாதீர்கள்!" என்று அம்மா சொன்னாள்.

"சரி அம்மா" என்று தலையை ஆட்டினாள் என் தங்கை. பிறகு நானும் என் தங்கையும் முயல் குட்டியைப் பங்கு போட்டுத் தின்றோம்.

எனக்கு மூன்று வயதானதும் பிடரி மயிர் வளர ஆரம்பித்தது. ஆறாவது வயதிலே நன்றாக வளர்ந்துவிட்டது. ஆனால், என் தங்கைக்குப்


பிடரி மயிர் வளரவில்லை. எங்களில் ஆணுக்குத்தான் பிடரி மயிர் உண்டு. பெண்ணுக்குப் பிடரி மயிர் கிடையாது என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே!

இப்போது எனக்கு வயது பன்னிரண்டு. நானும் என் அம்மா அப்பாவைப் போல், நன்றாக வளர்ந்து விட்டேன்; தைரியமாக வேட்டை ஆடுவேன். சூரியன் மறையும் சமயம் நான் ஒரு சத்தம் போடுவேன். என்னுடைய அந்தக் கர்ஜனையைக் கேட்டுக் காடு முழுவதும் கிடுகிடுக்கும். சிறிய மிருகங்களெல்லாம் நடுநடுங்கி நாலா பக்கமும் நாலுகால் பாய்ச்சலில் ஓடும். நான் தரையை நோக்கி எவ்வளவுக்கு எவ்வளவு குனிந்து கர்ஜிக்கிறேனோ, அவ்வளவுக்கு அவ்வளவு சத்தம் வெகு தூரம் கேட்கும்.

பயங்கரமான கர்ஜனை, கம்பீரமான தோற்றம் இவைகளுடன், ஓர் உயர்ந்த குணமும் எங்களிடம் உண்டு. நான் பசித்தால்தான் மற்ற மிருகங்களை வேட்டையாடுவேன். தேவையில்லாத போது, எந்த மிருகத்திற்கும் தொந்தரவு கொடுக்க மாட்டேன். ஆனால், எனக்கு யாரும் தொந்தரவு கொடுத்தால், சும்மா விடமாட்டேன். மணிக்கு ஐம்பது மைல் வேகத்தில் ஓடிப் பிடித்து விடுவேன்! இந்தக் குணங்களெல்லாம் எங்களிடம் இருப்பதால்தானே 'மிருக ராஜன்' என்று நீங்கள் அழைக்கிறீர்கள்? இல்லாதபோனால், புலி அல்லது யானைக்கு அந்தப் பெயரைக் கொடுத்திருக்க மாட்டீர்களா?

காற்று பலமாக அடிக்கும் சமயம், நான் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பேன். நல்ல

நிலவு வெளிச்சத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருப்பேன். சுற்று முற்றும் பார்த்துக்கொண்டே பதுங்கிப் பதுங்கி நடப்பேன். "தண்ணீர் குடிக்கப் போகும்போது, மிக மிக ஜாக்கிரதையாகப் போகவேண்டும்" என்று என் அம்மா சிறுவயதில் எனக்குச் சொல்லியிருக்கிருள். அங்குதான் சில சமயம், வேட்டைக்காரர்கள் எங்களை எதிர்பார்த்துக்கொண்டு துப்பாக்கியுடன் காத்திருப்பார்களாம்.



தண்ணீர் குடிக்க நான் தனியாகப் போவதும் உண்டு. என் தோழர்கள் சிலரோடு சேர்ந்து போவதும் உண்டு. அப்போது எதிர்க் கரையில் எங்களைப் போலவே ஒரு சிறு கூட்டம் தண்ணீர் குடிக்க வரும். நாங்கள் அவர்களைப் பார்த்துக் கர்ஜிப்போம். அவர்கள் எங்களைப் பார்த்துக் கர்ஜிப்பார்கள்.

அந்தக் காட்சியை நீங்கள் பார்த்தால், நாங்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் முறைக்கிறோம்

அல்லது சீறுகிறோம் என்று நினைப்பீர்கள். ஆனால், உண்மையில், நாங்கள் ஒருவரை ஒருவர் வாழ்த் தவே அப்படிக் கர்ஜிக்கிறோம்.

நாங்கள் கோபமாயிருக்கும்போது அல்லது பசிக்கும்போதுதான் கர்ஜிக்கிறோம் என்று சிலர் கூறுகிறார்கள். பசி அடங்கியவுடனும் நாங்கள் கர்ஜனை செய்வதுண்டு. நிறையச் சாப்பிட்ட பிறகு நீங்கள் ஏப்பம் விடுகிறீர்களே, அதே போலத்தான்! ஆனால், வேட்டை யாடும்போது நாங்கள் கர்ஜனை செய்யவே மாட்டோம்.


நான் வேட்டையாடப் போகும்போது, என் பின்னாலே சிறிது தூரத்தில் ஒரு மிருகம் வருவ துண்டு. அதன் பெயர் கழுதைப் புலி. அதன் மாமி சம் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. அதனால்தான் அது அப்படித் தைரியமாக வருகிறது. எதற்காகத் தெரியுமா? நான் கொன்று தின்னும் மிருகத்தில் மிச்சம் ஏதாவது இருந்தால், அதைத் தின்பதற் காகத்தான்!

இவ்வளவும் சொன்னேன். ஆனால், நான் எங்கு பிறந்தேன் என்பதைச் சொல்ல மறந்தே போய்விட் டேனே! நான் பிறந்தது வடநாட்டில் குஜராத்தி லுள்ள 'கிர்' வனப் பகுதியில்தான். இந்தியாவிலே அந்த ஓரிடத்தில்தான் இப்போது எங்கள் இனம் இருக்கிறது. பஞ்சாப், ராஜபுதனம் முதலிய இடங் களில்கூட முன்பு இருந்ததாம், இப்போது அங் கெல்லாம் இல்லை. அழித்துவிட்டார்கள்.

ஆப்பிரிக்காவில் பல இடங்களில் எங்கள் இனம் இருக்கிறது. ஆனால், இந்தியச் சிங்கமாகிய எனக்கும், ஆப்பிரிக்கச் சிங்கத்திற்கும் முக்கிய மான ஒரு வேற்றுமை உண்டு. என்னை விட

மிகவும் அழகான, அடர்த்தியான பிடரி மயிர் ஆப்பிரிக்கச் சிங்கத்திற்கு உண்டு.

இந்தியாவில் முன்பு நூற்றுக் கணக்கான ராஜாக்கள் இருந்தார்களாம். ஆனால், இப்போது ராஜா என்று யாருமே இல்லையாம். மிருக ராஜாக்களாகிய எங்களுக்கும் அந்தக் கதி வந்துவிடக் கூடாதே என்பதுதான் என் கவலை!





பள்ளிப் பாடப் புத்தகத்திலிருந்து, பெரிய பெரிய கலைக் களஞ்சியங்கள் வரை எல்லாவற்றிலும் என்னைப் பற்றி எழுதுகிறீர்கள். என் படத்தை அச்சிட்டு வேடிக்கை பார்க்கிறீர்கள். இதற்குக் காரணம் என்ன ?

உலகிலேயே நான்தான் மிகவும் விசித்திரமான மிருகம் என்று நீங்கள் முடிவு கட்டி விட்டீர்கள், அதனால்தானே ?

ஆம், நான் பல வகையிலும் விசித்திரமான பிராணிதான். முதலில் என் கால்களைப் பாருங்கள். முன் கால்கள் இரண்டும் குட்டையாயிருக்கின்றன. ஆனால், பின் கால்களோ மிகவும் நீளமாயிருக்கின்றன.

எனக்கு நடக்கத் தெரியும்; தாவத் தெரியும்; ஆனால், ஓடத் தெரியாது. நடக்கும்போது அல்லது புல் பூண்டுகளைத் தின்னும் போதுதான் நான் நான்கு கால்களையும் உபயோகப் படுத்துவேன். தாவும்போது முன் கால்களுக்கு வேலையே இல்லை. பின் கால்கள்தான் உதவியாயிருக்கும். ஒரே தாவில் என்றால் முப்பது அடி தூரம் செல்ல முடியும். உங்களில் யாரேனும் இவ்வளவு தூரம் தாவுவார்களா ?

உலகிலேயே அதிக நீளம் தாவியவர் ஒரு ரஷ்யாக்காரராம். அவரும் எவ்வளவு தூரம் தாவினார் என்று நினைக்கிறீர்கள் ? என்னைப் போல் 30 அடி தூரமா ? இல்லை. 27 அடி 3 அங்குலம்தான்! இதுவரை அதற்கு மேல் யாருமே தாவியதில்லையாம்.

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?" என்றுதானே கேட்கிறீர்கள் ? கேளுங்கள், கேளுங்கள்.

ஒரு நாள் இரண்டு அமெரிக்கர்கள் என்னைப் பார்க்க ஆஸ்திரேலியாவிற்கு வந்தார்கள். இங்குதானே என் இனத்தைப் பார்க்க முடியும் ? வந்தவர்கள் என்னைச் சும்மா பார்த்துவிட்டுப் போகவில்லை. புகைப்படம்கூட எடுத்தார்கள். அப்போது, அவர்கள் பேசியதிலிருந்துதான் நான் இதைத் தெரிந்து கொண்டேன்.

உயரம் தாவுவதிலும் நான் சளைத்தவனல்ல. என்றால் ஏழடி உயரம் தாவ முடியும். என்ன! முடியாது என்று நினைக்கிறீர்களா ? இப்போதே பார்த்துவிடலாம். வயது வந்த ஓர் ஆளைக் கொண்டு வந்து, என் முன்னால் நிறுத்துங்கள்.

'ஒன்று...இரண்டு...மூன்று' என்று சொல்லுங்கள். உடனே பாருங்கள். அந்த மனிதரின் தலை மயிரில்கூட என் கால் படாதபடி ஒரே மூச்சில் அவரைத் தாண்டிவிடுவேன். உடனே நீங்கள் எல்லாம் என்ன செய்வீர்கள்? பலமாய்க் கை தட்டுவீர்கள்.



இதோ என் பின் பக்கம் பாருங்கள். தடித்து நீண்ட வால் இருக்கிறது. உட்காரும் போதும், தாவும் போதும் இந்த வால் எனக்கு எவ்வளவு உதவுகிறது, தெரியுமா? நான் உட்காரும் போது தரையில் உட்காரமாட்டேன். இந்த வாலையும், பின் கால்கள் இரண்டையும் சேர்த்து வைத்துக்கொள்வேன். அசல் முக்காலிபோல் இருக்கும். அந்த முக்காலி மீதுதான் நான் உட்கார்ந்து கொள்வேன். குதித்துக் குதித்துச் செல்லும் போது, இந்த வாலைப் பின் பக்கமாக நீட்டி வைத்துக் கொள்வது என் வழக்கம். இந்தப் பக்கம், அந்தப் பக்கம் நான் சாய்ந்து விடாமல் இருக்கவும், வேண்டிய பக்கம் திரும்பவும் துடுப்பைப் போல் இது உதவுகிறது.

வாலையும், காலையும் பற்றியே நான் சொல்லிக் கொண்டிருக்கும்போது, நீங்கள் என் வயிற்றையே

பார்க்கிறீர்களே! ஓகோ! புரிகிறது, புரிகிறது. என் வயிற்றிலுள்ள பைக்குள்ளிருந்து எட்டி எட்டிப் பார்க்கிறதே ஓர் உருவம், அதைத்தானே இப்படிக் கண் கொட்டாமல் பார்க்கிறீர்கள்? நன்ருகப் பாருங்கள், பாருங்கள். இது என் குழந்தைதான்.

ஐந்து மாதங்களுக்கு முன்பு இது பிறந்தது. இப்போது இதன் உயரம் ஒன்றரை அல்லது ஒன்றே முக்கால் அடி இருக்கும். ஆனால், பிறந்தவுடனே எவ்வளவு உயரம் இருந்தது, தெரியுமா? சொன்னுல் நம்பமாட்டீர்கள். சரியாக ஓர் அங்குலம்தான்! ஆம், ஒரே அங்குலம்தான்! நானே ஆறடி இருக்கிறேன். எனக்குப் பிறந்த குழந்தை ஓர் அடியாவது இருக்க வேண்டாமா? என்ன செய்வது?

**'ஆறடி அம்மாவுக்கு அங்குலக் குழந்தை'** என்று உங்களுக்குப் பாடத் தோன்றுகிறதா? சரி, பாடிவிட்டுப் போங்கள்.

பிறந்தவுடனே இந்தப் பிள்ளையை என் உதடுகளால் மெதுவாகத் தூக்கி இந்தப் பைக்குள்ளே வைத்தேன். உயரம் ஓர் அங்குலமாக இருக்கும் போது, நான் தரையிலே விட முடியுமா? புல் பூண்டுகளுக்குள் அகப்பட்டுக் கொண்டுவிட்டால் என்ன செய்வது? தேடிக் கண்டுபிடிப்பதே சிரமமாகிவிடுமே! அதனுல், கொஞ்ச காலம்வரை இதைத் தரையில் விடுவதே இல்லை. எப்போதும் இந்தப் பைக்குள்ளே பத்திரமாக வைத்திருப்பேன். உங்கள் ஆசிரியர் சட்டைப் பைக்குள் சாக்குக் கட்டியை வைத்திருப்பாரே, அதே போலத்தான் இதையும் என் பைக்குள்ளே வைத்திருப்பேன்.

அப்போதெல்லாம் இந்தப் பிள்ளைக்குப் பாலை உறிஞ்சிக் குடிக்கத் தெரியாது. என் மடியி லிருந்து இதன் வாய்க்குள்ளே பாலைப் பீச்சிவிடு வேன். பாலைக் குடித்துவிட்டுப் பைக்குள்ளே நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கும். நாள் ஆக ஆக, இது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வந்தது.

இப்பொழுதெல்லாம், இது அடிக்கடி பையை விட்டு வெளியே வரும். பக்கத்திலே உள்ள புல்லை ஆசை ஆசையாகக் கடித்துத் தின்னும். நன்றாகக் குதித்துக் குதித்து விளையாடும். அப்போது, ஏதாவது சத்தம் கேட்டால் போதும்; உடனே நான் 'லபக்'கென்று இதைப் பிடித்துப் பைக்குள்ளே போட்டுக் கொள்வேன். கண் மூடிக் கண் திறப்பதற்குள் அந்த இடத்தைவிட்டு மறைந்து விடுவேன்.

இந்தக் குழந்தை இன்னும் மூன்று மாதம் வரைதான் என் பைக்குள்ளே வசிக்கும். அதற் குள்ளே, அதாவது எட்டாவது மாதத்திற்குள்ளே, இதற்குத் தானாகவே இரை தேடத் தெரிந்துவிடும். அப்புறம் என் உதவி எதற்கு? "இன்னமும் நீ என்ன, சின்னப் பிள்ளையா? நீதான் நன்றாக வளர்ந்து விட்டாயே! இனியும் நீ பைக்குள்ளே இருந்தால், மற்றப் பிள்ளைகள் உன்னைப் பார்த் துச் சிரிக்கமாட்டார்களா?" என்று கூறிப் பையி லிருந்து இதை வெளியில் இறக்கிவிடுவேன். அப் புறம் இது திரும்பி என் பைக்கு வராது. அப் படி வந்தாலும் நான் இடம் கொடுக்கமாட்டேன்.

எங்களைப் போலவே ஆஸ்திரேலியாவில் சில மிருகங்கள் இருக்கின்றன. எங்களைச் 'சிவப்புக்


கங்காரு' என்பார்கள். சாம்பல் நிறக் கங்காரு, எலிக் கங்காரு, வலபி—இப்படிச் சிலவகை உண்டு. சாம்பல் நிறக் கங்காரு நல்ல உயரமாக இருக்கும். ஆனால், அது எங்களைப் போல் புல்வெளியில் வசிப்பதில்லை. மரங்கள் அடர்ந்த இடத்தில்தான் வசிக்கும்.

வலபி, எலிக் கங்காரு—இவைகளெல்லாம் சிறிதாயிருக்கும். எங்களைப் போல் வேகமாகப் பாய்ந்து செல்ல அவைகளால் முடியாது. ஆபத்து என்றால், புதருக்குள் ஒளிந்து கொள்ளும்.

ஆஸ்திரேலியாவின் மத்திய பாகத்திலே சில காட்டு ஜாதியார் வசிக்கிறார்கள். அவர்களைப் பார்த்தால், 'ஆதிகாலத்து மனிதர்கள் இப்படித் தான் இருந்திருப்பார்களோ!' என்று நீங்கள் நினைத்துவிடுவீர்கள். அவர்கள் துணி உடுத்த மாட்டார்கள்; அவர்களுக்கென்று வீடு வாசல் எதுவுமே கிடையாது. அடிக்கடி இடம் மாறிக் கொண்டேயிருப்பார்கள். தேவையான போது, இலை தழைகளால் கொட்டகை போட்டுக்கொண்டு, அங்கே தங்குவார்கள்.

குறி பார்த்து ஈட்டி எறிவதில் அவர்கள் சூராதி சூரர்கள்! அவர்களைப் பார்த்தாலே எங்களுக்குப் பயம்! எங்களுடைய மாமிசம் அவர்களுக்கு மிகவும் பிடிக்குமாம். அத்துடன், எங்களுடைய தோல் மிருதுவாகவும் உறுதியாகவும் இருப்பதால், எங்கள் உயிருக்கு அவர்கள் எமனாகி விடுகிறார்கள்!

நாங்கள் யாருடனும் வீண் வம்புக்குப் போக மாட்டோம். அப்படியிருந்தும், வேட்டைக்கா



ரர்கள் எங்களை விட்டு வைக்கிறார்களா? எங்கள் மேல் வேட்டை நாய்களை ஏவி விடுகிறார்கள். நாங்கள் நீண்ட தூரம் தாவித் தாவி வேகமாகச் செல்வதால், வேட்டை நாய்களால் எங்களை எளிதிலே பிடிக்க முடியாது. சில வேட்டை நாய்கள் தப்பித் தவறி அருகிலே வந்து விட்டால், பின்னங் கால்களால் பலமாக உதைப்போம். அத்துடன் விடமாட்டோம்; நகங்களாலும் நன்றாகக் கீறி விடுவோம்!

எனக்கு இந்தக் குழந்தை பிறப்பதற்கு முன்பு ஒரு நாள், ஒரு நாய் என்னை வேகமாகத் துரத்தி வந்தது. வெகு தூரம் பிடிகொடுக்காமல் சென்று கொண்டிருந்தேன். வழியிலே ஓர் ஆறு குறுக்கிட்டது. உடனே நான் ஆற்றுக்குள் இறங்கி நாலைந்து அடி ஆழத்தில் நின்று கொண்டேன்.

வேட்டை நாய் விடவில்லை. தண்ணீருக்குள் குதித்து, என்னை நோக்கிக் குலைத்துக்கொண்டே வந்தது. அருகிலே வந்ததும், நான் என்ன செய்தேன், தெரியுமா? சட்டென்று அதன் தலையை முன்னங் கால்களால் பிடித்துத் தண்ணீருக்குள் அமுக்கினேன். அது எவ்வளவோ முண்டியடித்துப் பார்த்தது. நான் பிடியை விடவில்லை. தண்ணீருக்குள் அது எவ்வளவு நேரம்தான் உயிரோடு இருக்க முடியும்? சிறிது நேரத்தில், நான் பிழைத்தேன்.

வேட்டை நாய்...?





நான் சிறு பிள்ளையாக இருந்தபோது ஒரு சம்பவம் நடந்தது. அப்போது எனக்கு ஒரு வயது. என் தம்பிக்கும் அதே வயதுதான். என் தங்கைக்கும் அதே வயதுதான். நாங்கள் மூவரும் ஒன்றாகப் பிறந்தவர்களே !

ஒருநாள் மாலை நேரம். என் அப்பாவும் அம்மாவும் வேட்டையாடப் போயிருந்தார்கள். நாங்கள் மட்டுமே குகைக்குள் இருந்தோம். நான் என் தம்பியையும், தங்கையையும் பார்த்து, "எத்தனை நாளைக்குத்தான் இந்த இருட்டுக் குகைக்குள் அடைத்துக்கிடப்பது? இன்று நாம் வெளியிலே போய்ச் சுற்றிப் பார்த்துவிட்டு வருவோம். உம், புறப்படுங்கள், போகலாம்" என்றேன்.

உடனே என் தங்கை, "ஐயோ, ஆபத்து! அம்மா என்ன சொல்லிவிட்டுப் போனுள்? 'நாங்கள் திரும்பி வரும்வரை குகைக்குள்ளே இருக்கவேண்டும். வெளியிலே போகக் கூடாது' என்று சொல்லவில்லையா? அம்மா சொல்லை மீற லாமா? வேண்டாம் அண்ணு. அம்மாதான் நம்மைச் சீக்கிரம் வெளியிலே அழைத்துப் போவ தாகச் சொல்லியிருக்கிருளே?" என்ருள்.

"நீ ஒரு கோழை. நீ வராத போனுல் போ. நான் தம்பியை அழைத்துப் போகிறேன்" என்றேன்.

அவனும் வர மறுத்துவிட்டான். தங்கையின் கட்சியில் சேர்ந்துகொண்டான்.

"நீங்கள் வந்தாலும் சரி, வராத போனுலும் சரி; நான் போகிறேன்" என்று கூறிவிட்டுத் தைரி யமாக நான் குகையை விட்டுக் கிளம்பினேன். என் தம்பியும் தங்கையும் தடுத்துப் பார்த்தார்கள். நான் கேட்கவில்லை; புறப்பட்டு விட்டேன்.



குகையை விட்டு வெளி யில் வந்தேன். காட்டிலே நுழைந்தேன். சிறிது தூரம்தான் சென்றிருப் பேன். 'டுப்'என்று பலத்த சத்தம் ஒன்று கேட்டது. திடுக்கிட்டேன். அங்கி ருந்த ஒரு புதர் மறைவில் ஒளிந்து கொண்டேன். உற்றுப் பார்த்தேன்.

அப்போது நாலுகால் பாய்ச்சலில் ஓர் உருவம்

சிறிது தூரத்தில் போவதைக் கண்டேன். பார்த்ததுமே, அது என்ன என்பதைத் தெரிந்து கொண்டுவிட்டேன். அதுதான் மான்! என் அப்பா இரண்டு மூன்று தடவைகள் மானைக் கொன்று குகைக்குள்ளே இழுத்துவந்திருக்கிறார். அது ஓடிச் சென்ற சிறிது நேரத்தில், மற்றோர் உருவம் அந்த வழியாகப் போனது. அது ஒரு விசித்திரமான பிராணியாக எனக்குத் தெரிந்தது.

"இது என்ன பிராணி? இதற்கு நான்கு கால்கள் இருக்கின்றன. ஆனாலும், இரண்டு கால்களாலே நடக்கிறதே! மற்ற இரண்டு கால்களில், ஒரு காலில் நீளமாக, கறுப்பாக ஏதோ வைத்திருக்கிறது. இன்னொரு காலை வீசி வீசிக் கொண்டே செல்கிறதே!" என்று நினைத்தேன்.

அந்த விசித்திரப் பிராணியின் தலை மறையும் வரை ஒளிந்து பார்த்துக்கொண்டே நின்றேன். சிறிது நேரத்தில் திரும்பவும் 'படார்' என்று பலத்த ஒரு சத்தம் கேட்டது. அதைக் கேட்டதும் என்னை அறியாமலே ஒரு பயம் ஏற்பட்டது. உடம்பு நடுங்கியது. உடனே நான் ஒரு விநாடி கூட அங்கே நிற்கவில்லை. ஒரே ஓட்டமாகக் குகையை நோக்கி ஓடி வந்துவிட்டேன்.



பயத்தோடு நான் ஓடி வருவதைக் கண்டதும், "என்ன! என்ன!" என்று என் தம்பியும் தங்கையும் கேட்டார்கள். நடந்ததை நான் சொன்னேன்.

சொல்லி முடித்ததும், பின்னுல் உறுமல் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். என் அப்பாவும் அம்மாவும் சிறிது தூரத்தில் நின்றுகொண்டிருந் தார்கள். பூனைபோல் ஓசைப்படாமல் உள்ளே வந்து, நான் சொன்னதை யெல்லாம் இவ்வளவு நேரமாக அவர்கள் கேட்டுக்கொண்டே இருந்திருக் கிருர்கள்!

நான் திரும்பிப் பார்த்ததும், "நல்ல வேளை! தப் பித்தாய். நீ ஒரு விசித்திரப் பிராணியைப் பார்த்த தாகச் சொன்னுயே, அதுதான் மனிதன்! நமக்குப் பரம விரோதி. அவனுக்கு நம்மைப் போல் நான்கு கால்கள் கிடையாது. இரண்டு கால்கள், இரண்டு கைகள் உண்டு. கையிலே நீளமாக, கறுப்பாக வைத்திருந்ததுதான் துப்பாக்கி. அதனுல்தான் காட்டு மிருகங்களையெல்லாம் 'டுப், டுப்' என்று அவன் சுட்டுக் கொல்கிருன். நல்ல காலமாக நீ அவன் கண்ணில் படாமல் தப்பித்தாய்" என்ருள் என் அம்மா.

"இனிமேல் இப்படித் தனியாகப் போவுயோ, அறைதான்!" என்று பாதத்தைத் தூக்கிக் காட்டி எச்சரித்தார் என் அப்பா.

உங்களுடைய இனத்தை முதல் முதலாக நான் பார்த்தது அந்தச் சமயத்தில்தான்.

நானும் என் தம்பியும் தங்கையும் பிறந்து பத்து நாட்கள் வரை கண்ணைத் திறக்கவே இல்லை. எங்களுடைய கண்களை அம்மா தினமும் நாக்கால் நக்கி நக்கிக் கொடுப்பாள். பத்தாவது நாள்தான் எங்களைப் பெற்ற அம்மாவையும் அப்பாவையும் நாங்கள் சரியாகப் பார்த்தோம்.

அம்மா எங்களுக்கு அன்போடு பால் ஊட்டி வளர்த்தாள். நாங்கள் பாலைக் குடித்துவிட்டு ஒருவர் முதுகில் ஒருவர் ஏறி விளையாடுவோம். ஒருவரை ஒருவர் தள்ளி விளையாடுவோம். சில சமயம் எங்கள் விளையாட்டு வினையாகிவிடும்! அப்போது அம்மா, 'உர்...உர்...' என்று மிரட்டி எங்களை அடக்குவாள்.

நாங்கள் பிறந்து சில நாட்கள் வரை அம்மா எங்களுடனேயே குகையில் இருந்தாள். அப்பா மட்டும்தான் இரை தேடப் போவார். அவர் சில சமயம் மிருகங்களைக் கொன்று அப்படியே இழுத்துக்கொண்டு வருவார். சில சமயம் சாப்பிட்டு விட்டு மிச்சத்தைக் கொண்டு வருவார். சிறு வயதில் தாய்ப் பாலைத் தவிர எங்களுக்கு என் பெற்றோர்கள் எதுவுமே கொடுக்க மாட்டார்கள். நாள் ஆக ஆகக் கொஞ்சம் கொஞ்சமாக மாமிசத் துண்டுகளைக் கொடுத்து எங்களைப் பழக்கினாள் அம்மா.

எங்களுக்கு ஒரு வயதானது. அப்போது அப்பாவும் அம்மாவும் எங்களைத் தினமும் காட்டுக் குள்ளே அழைத்துச் செல்வார்கள். எல்லோரும் அடர்ந்த புதர் மறைவில் மறைந்து நின்று கொள்வோம். சமயம் பார்த்து, அப்பாவும் அம்மாவும் அந்தப் பக்கமாக வரும் மிருகங்களின் மேல் பாய்ந்து, பிடரியைக் கடித்துக் கொதறுவார்கள். அப்படித்தான் வேட்டையாட வேண்டும் என்று எங்களுக்கும் அம்மா சொல்லித் தருவாள்.

ஒரு நாள் சிறிது தூரத்தில் ஒரு மிருகம் போவதைப் பார்த்தோம். உடனே அம்மா, "அதோ பார். அது பொல்லாத பிராணி.

அருகிலே போனால், அதன் முதுகிலே உள்ள முட்கள் சட்டென்று நிமிர்ந்து நிற்கும். அதை நாம் தாக்கினால், நம் கால்களிலோ அல்லது தோளி லோ அந்த முட்கள் குத்திவிடும்! மிகவும் வலிக் கும்" என்றாள்.

"அதன் பெயர் என்னம்மா?" என்று என் தங்கை கேட்டாள்.

"முள்ளம் பன்றி. இதைப் போலத்தான் காட் டுப் பன்றியும். முன்னால் இரண்டு தந்தம் இருக்கும். முரட்டுத் தனமாக எதிர்த்துத் தாக்கும். இந்த மாதிரி மிருகங்களிடத்தில் மிகவும் ஜாக்கிரதை யாக இருக்கவேண்டும்" என்றார் அப்பா.

இன்னொன்றும் அவர் சொன்னார். "நாம் காற்று வீசும் திசையிலே போனால், நாம் வருவதைச் சில மிருகங்கள் மோப்பத்தால் கண்டுபிடித்துத் தப் பித்துக் கொள்ளும். அதனால் எதிர்த் திசையில் போவதுதான் எப்போதும் நல்லது" என்றார்.

வேட்டைக்காரர்கள் எங்களை உயிரோடு பிடிக்க ஒரு தந்திரம் செய்வார்களாம். ஆழமாக ஒரு குழியை வெட்டி, அதன்மேல் மூங்கிலால் மூடுவார்களாம். அதற்கு மேல் இலை தழைகளைப் போட்டு மறைத்து, நடுவிலே ஓர் ஆட்டைக் கட்டி வைப்பார்களாம். ஆட்டைப் பார்த்ததும் எங்களில் சிலர் ஆசையோடு பாய்வார்களாம். மூங்கில்கள் 'சட,சட' என்று நொறுங்குமாம். உடனே, ஆட் டுடன் நாங்களும் அக்குழிக்குள் விழ வேண்டி யதுதானும்! வேட்டைக்காரர்கள் கயிறுகளைப் போட்டு வளைத்துக் கட்டி எங்களை மேலே தூக்கு வார்களாம். அப்புறம்...? அப்புறம் என்ன? காட்டுக்குள் இருக்கவேண்டிய நாங்கள், கூட்டுக்

குள் அடைபட்டு மிருகக் காட்சி சாலையில் இருப்போம். அல்லது, சர்க்கஸில் மனிதன் சொன்னபடி வித்தை செய்வோம்.

இதையெல்லாம் என் அம்மாவும் அப்பாவும் எங்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள்.


இரண்டு வயதாகும் வரை நாங்கள் அவர்களுடன்தான் இருந்தோம். அப்புறம் நாங்கள் தனித் தனியாகப் பிரிந்து போய்விட்டோம். எத்தனை நாட்களுக்குத்தான் அப்பா, அம்மாவுக்குப் பாரமாக இருப்பது?

பிறகு, நான் ஒரு குகையைக் கண்டுபிடித்து அதிலே தனியாக வசிக்கத் தொடங்கினேன். பகல் நேரத்தில் குகையிலே அல்லது புதர் மறைவிலே படுத்து உறங்குவேன். இரவு நேரத்தில் வேட்டைக்குப் புறப்பட்டுவிடுவேன்.

சில சமயம் நான் ஆற்றில் குளிப்பதுண்டு. குளித்தவுடன் கரைக்கு வந்து, அங்கே படுத்துப் புரளுவேன். அதிலே எனக்கு ஒரு தனி ஆனந்தம். ஆற்றைக் கடந்து அக்கரை போகவும் எனக்குத் தெரியும். அடிக்கடி நான் அப்படிப் போவதுண்டு.

"எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறாயே, உனக்கு மரம் ஏறத் தெரியுமா?" என்று கேட்கிறீர்களா? அதுவும் எனக்குத் தெரியும். ஆனால், மிகவும் அவசியமான போதுதான் ஏறுவேன். இருந்தாலும் சிறுத்தைப் புலியைப் போல அவ்வளவு நன்றாக மரம் ஏறத் தெரியாது.

முன்பெல்லாம் மனிதர்களைப் பார்த்தால், நான் தானாக ஒதுங்கிப் போய்விடுவேன். ஆனால், இப்போது மனிதர்களைக் கண்டால் விடமாட்டேன். இதற்குக் காரணம் என்ன, தெரியுமா?



ஒரு முறை ஒரு மனிதனைக் காட்டின் மத்தியில் கண்டேன். அவன் கையிலே கனத்த தடி இருந்தது. முயல் வேட்டைக்கு வந்திருப்பான் போலிருக்கிறது. அவனைப் பார்த்ததும், நான் என்னைத்தான் அவன் தாக்க வருகிறான் என்று நினைத்து, 'உர்! உர்!' என்றேன். உடனே அவன் தப்பித்துக் கொள்ளத் தடியை ஓங்கினான். மறு விநாடி நான் அவன் மேல் பாய்ந்தேன். அப்போது அவனுடைய இரத்தத்தை ருசி பார்த்து விட்டேன். ஆஹா, என்ன ருசி! என்ன ருசி! அது மாதிரி ருசியான இரத்தத்தை நான் குடித்ததே இல்லை. அதுமுதல் மனிதனை நான் எங்கே கண்டாலும் விடுவதில்லை.

ஒரு சமயம், ஒரு மனிதன் மரத்திலே ஒளிந்து கொண்டிருப்பதைப் பார்த்து விட்டேன். உடனே வேகமாக அவனை நோக்கித் தாவினேன். 20 அடி உயரம் என்றால் தாவ முடியும். உயரத் தாவி ஒரு கிளையிலே தொத்திக் கொண்டேன். அப்புறம் என்ன? அவன் கதி அதோ கதிதான்!

சிங்கத்தை 'மிருகராஜன்', 'மிருகராஜன்' என்று அழைக்கிறீர்கள். ஆனால், சிங்கத்தைவிட எனக்குப் பலம் அதிகம் என்பது உங்களுக்குத் தெரியுமா? தெரிந்தால் நல்லது. தெரியாத போனால், இப்போதாவது தெரிந்து கொள்ளுங்கள்.


எங்கள் இனத்தை ஆசியாக் கண்டம் ஒன்றில் தான் பார்க்க முடியும். அதிலும், இந்தியா, பர்மா, ஜாவா, சுமத்திரா முதலிய நாடுகளில்தான் காண லாம். இலங்கையில்கூடக் காண முடியாது.

எங்களிலே சிலர் கிழடாகி யிருப்பார்கள். சிலருக்கு உடம்பிலே காயம் பட்டிருக்கும். அப் போது அவர்களால் ஓடி ஆடி இரை தேட முடி யாது. அதனால் அவர்கள் ஊருக்குள்ளே புகுந்து, ஆடுமாடுகளையும், மனிதர்கள் அகப்பட்டால் அவர் களையும் கொன்று தின்பதுண்டு. காட்டிலே சரி யான இரை கிடைக்காதபோதிலும் இப்படித்தான் செய்வோம். வேறு வழி?

நான் இன்னும் கிழடாக வில்லை. கிழடாகி விட்டால், உடம்பில் வலு இருக்காது. இரை தேடு வது கஷ்டந்தான். அதற்காக நான் பட்டினி கிடந்து சாகமாட்டேன். அருகிலுள்ள கிராமத் துக்கு இரவு நேரத்திலே செல்வேன். ஆடுமாடு

களை அடித்துச் சாப்பிடுவேன். அப்போது மனிதர்கள் அகப்பட்டால், ஆஹா, கொண்டாட்டம் தான்! மனிதர்களிடம் நான் அகப்பட்டுக் கொண்டாலோ.....? ஐயோ, திண்டாட்டம்தான்!





நீங்கள் வாழை மரத்தைப் பற்றி மிகவும் பெருமையாகப் பேசுகிறீர்கள். வாழை மரத்தின் இலை, பூ, காய், பழம், தண்டு, கிழங்கு, பட்டை, நார் எல்லாம் உங்களுக்கு உபயோகப்படுவதால்தானே அப்படிச் சொல்லுகிறீர்கள்? நான்கூடத்தான் வாழையைப் போல் பலவிதத்திலும் உதவி வருகிறேன்.


பாலைவனத்தில் சாமான் தூக்கவும், சவாரி செய்யவும் என்னைத்தான் அரேபியர்கள் பயன்படுத்துகிறார்கள். என் பாலைக் கறந்து குடிக்கிறார்கள். அதிலே பாலடைக் கட்டி செய்து, பல நாள் கெடாமல் வைத்திருக்கிறார்கள். என் உரோமத்தில் கயிறு திரிக்கிறார்கள். துணி நெய்

கிறார்கள். இவை மட்டுமா? ஓவியர்கள் உபயோ கப் படுத்துகிறார்களே தூரிகை, அதற்கும் என் உரோமம் உதவுகிறது. என் சாணத்தைக் கூட அரேபியர்கள் விடுவதில்லை. வறட்டி தட்டி எரிக்கிறார்கள். அரேபியர்களில் சில பொல்லாத வர்கள் இருக்கிறார்கள். அவர்கள் என் இனத்தவ ரைக் கொன்று, மாமிசத்தையும் தின்று விடு கிறார்கள்!

செத்த பிறகுகூட நாங்கள் உபயோகப்படு கிறோம். எங்களுடைய தோலைப் பதனிட்டு, பைகள், குல்லாக்கள் செய்கிறார்கள். தந்தத்தைப் போல் எங்களுடைய எலும்பிலும் பல சாமான்கள் செய் கிறார்கள்.

என் முதுகைப் பாருங்கள். எனக்கு ஒரே ஒரு திமில்தானே இருக்கிறது? சில ஒட்டகங்களுக்கு இரண்டு திமில்கள் இருக்கும். ஆனால், அவற்றை நான் பிறந்த அரேபியப் பாலைவனத்திலே காண முடியாது. சைனாவிலும் சைபீரியாவிலுமே காண லாம். அவை எங்களைவிடக் குள்ளமாகவும், குண் டாகவும் இருக்கும். கால்களும் குட்டையாக இருக் கும். அங்கெல்லாம் மலைகள் அதிகம். கால்கள் குட்டையாக இருப்பதால், மலை மேல் ஏறுவது சுலபம். ஆனால், எங்களைப் போல் மணல் வெளி யில் நடப்பதற்குக் குட்டைக் கால்களை விட நெட் டைக் கால்கள்தான் வசதியாயிருக்கின்றன. அத னால்தான், எங்களுடைய கால்கள் நெட்டையா யிருக்கின்றன.

எங்களுடைய உரோமத்தைவிட அவைகளின் உரோமம் அடர்த்தியாயிருக்கும். காரணம், அவை வசிக்கும் இடங்களில் அடிக்கடி குளிர் காற்று



வீசும். வறண்ட பாலை வனத்தில் வசிக்கும் எங்களுக்கு அவ்வளவு அடர்த்தியான உரோமம் எதற்கு?

என் இனத்தவரை அரேபியாவில் மட்டுமல்ல; வட ஆப்பிரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் உள்ள சில வறண்ட பிரதேசங்களிலும் காணலாம். உங்கள் தேசத்தில்கூட என் இனத்தைச் சேர்ந்த சிலர் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் வண்டி இழுக்கிறார்கள். சிலர் வயலை உழுகிறார்கள். கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைக்கவும் சிலர் உதவுகிறார்கள்.

நான் பாலைவனத்தில் வசிப்பதாகச் சொன்னேன் அல்லவா? பாலைவனம்என்றால் உங்களுக்குத்தான் தெரியுமே! இங்கு உயரமான கட்டடங்களைப் பார்க்கவே முடியாது. பசுமையான வயல்களைப் பார்ப்பதே அபூர்வம். இங்கு மழை எப்போதாவதுதான் பெய்யும். சில இடங்களில் 6, 7 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் மழை பெய்வதுண்டு!

என்னுடைய எஜமானர் பெயர் அப்துல்லா. அவருக்குச் சொந்தமாக வீடு கிடையாது. கூடாரம்தான் அவருடைய வீடு. அவரும் அவருடைய குடும்பத்தாரும் பாலைவனத்திலே ஓரிடத்தில் நிலையாகத் தங்கமாட்டார்கள். ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்கள் ஓரிடத்தில் கூடாரம் போடுவார்கள். பிறகு அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டு

வேறு ஓரிடத்திற்குப் போவார்கள். இப்படி இடம் விட்டு இடம் போவதற்கு நான்தான் மிகவும் உதவியாயிருப்பேன். அவர்களுடைய கூடாரம், சாமான்கள், கம்பளிகள் எல்லாவற்றையும் நான் தான் சுமந்து செல்வேன்.

பாலை வனத்தில் என்னைப் போல் எவராலுமே நடக்க முடியாது. அதனுல்தானே என்னைப் 'பாலைவனக் கப்பல்' என்கிறீர்கள்? முதுகிலே 600, 700 பவுண்டு எடையைச் சுமந்துகொண்டு ஒரு நாளுக்கு 25 அல்லது 30 மைல் தூரங்கூட நடப்பேன். அதற்கு மேல் என்னுல் முடியாது. வீண் தொந்தரவு செய்தால் விழுந்து படுத்துக் கொள்வேன்!

என் எஜமானர் ஓரிடத்திலிருந்து வேருேர் இடத்திற்குப் புறப்படுவதற்கு முன்னுல், என் திமிலை ஒரு பார்வை பார்ப்பார். அது 'கொழு கொழு' என்று இருந்தால், "சரி, கவலையில்லை; நீண்ட தூரம் போகலாம்" என்று முடிவு கட்டு வார். புறப்படுவதற்கு முன்பு, மோட்டார் காரில் பெட்ரோல் இருக்கிறதா என்று பார்க்கிறீர்களே, அப்படித்தான்!

பாலைவனத்தில் எனக்கு அபூர்வமாகவே உணவு கிடைக்கும். கடற்கரை ஓரத்தில் அல்லது ஆற்றங்கரை அருகேதான் மரம் செடி கொடிகளைக் காணமுடியும். அங்கேதான் மக்களும் வீடு கட்டிக் கொண்டு நிரந்தரமாக வசிப்பார்கள். அங்கு என் எஜமானர் வியாபாரத்திற்காகச் செல்வதுண்டு. அப்படிப் போகும்போது,அங்கு ஏராளமாகஉணவு கிடைக்கும். நிறைய நிறையச் சாப்பிடுவேன். தேவைக்கு அதிகமாகவே சாப்பிட்டு வைப்பேன்.

நான் தேவைக்கு மேல் சாப்பிட்டது எவ்வளவு என் பதை, என்னுடைய திமிலைப் பார்த்தே கண்டு பிடித்து விடலாம். கொழுப்பாக அது அங்கே இருக்கும்.

பாலைவனத்தில் செல்லும்போது பல நாட் களுக்கு உணவு கிடைக்காது. அப்போது என் திமிலில் இருக்கும் கொழுப்பு உதவியாயிருக்கும். எனக்கு வேண்டிய சத்து அங்கிருந்து கிடைக்கும். நாள் ஆக ஆக, திமில் சிறுத்துக்கொண்டே வரும். கடைசியில் அது தொய்ந்து போய் முதுகோடு ஒட்டிக் கிடக்கும்.

தண்ணீர் கிடைக்கும் போதும் இப்படித்தான் செய்வேன். அளவுக்கு மேல் குடித்துவிடுவேன். என் வயிற்றிலே தேன்கூடு போல் பல அறைகள் உள்ளன. அந்த அறைகளில் தண்ணீர் தேங்கி நிற்கும். அந்த அறைகளிலிருந்து தேவையான தண்ணீரை எடுத்துக்கொள்வேன். இதனால், பல நாட்கள் தண்ணீர் குடிக்காமலே என்னால் காலம் தள்ள முடிகிறது.

வறண்ட பாலைவனத்தில் சில முள்செடிகள் வளர்வதுண்டு. அந்தச் செடிகளைப் பார்த்தால் நான் விடமாட்டேன். “அடடே, அதிலுள்ள முட்கள் நாக்கைக் குத்திவிடுமே! வாயைக் கிழித்து விடுமே!” என்று கவலைப்படுகிறீர்களா? கவலைப் படாதீர்கள். அந்த முட்கள் எங்களை ஒன்றுமே செய்வதில்லை. குள்ளமாக அங்கே ஒரு முள் செடி இருக்கிறது. அதற்குப் பெயர் என்ன தெரியுமா? ஒட்டக முள்செடி! எங்களுக்குப் பிரியமான செடி யாக இருப்பதால்தான் அதற்கு அப்படிப் பெயர் வைத்துவிட்டார்கள்!

ஆடுமாடுகளைப் போல் நானும் அசைபோடும் மிருகம்தான். கிடைக்கும் உணவை அப்படியே விழுங்கிவிடுவேன். பின்னர் சாவதானமாக, விழுங் கிய உணவை வாய்க்குக் கொண்டுவந்து பற்க ளால் நன்ருக மென்று தின்பேன்.

எனக்கு நீந்தத் தெரியாது. ஓடும் தண்ணீரைக் கண்டாலே பயம்தான்! நான் என்ன, தண்ணீர்க் கப்பலா? பாலைவனக் கப்பல்தானே! பாலைவனத் தில் தண்ணீரைக் கடக்கவேண்டிய தேவையே வருவதில்லை.

பாலைவனத்தில் பகல் நேரத்திலே வெய்யில் மிகமிக அதிகம். பாலைவனத்தில் பல ஆண்டு களாக வாழும் என் எஜமானர்கூட நடுப்பகலில் வெளியே தலைகாட்ட மாட்டார். அவரும், அவர் குடும்பத்தாரும் கூடாரத்திற்குள்ளே தங்கியிருப் பார்கள். ஆனல், நான் சூரியனுக்குப் பயப்படுவதே இல்லை. கடுமையான வெய்யிலில்கூட நான் வெட்ட வெளியில்தான் படுத்திருப்பேன்.

பாலைவனத்தில் அடிக்கடி சூருவளி வீசும். அந்தக் காற்று மணலை வாரி வாரி இறைக்கும். அப்போது நான் தரையிலே கழுத்தை நன்ருக நீட்டிப் படுத்துக்கொள்வேன். கண்களையும், மூக்கையும் இறுக மூடிக் கொள்வேன்.

"கண்களை மூடுவதற்குத்தான் கண் இமைகள் இருக்கின்றன. மூக்கை எப்படி மூட முடியும்?" என்றுதானே கேட்கிறீர்கள்? என் மூக்கைக் கூர்ந்து பாருங்கள். அது அகலமாகவோ அல்லது வட்டமாகவோ இருக்கிறதா? இல்லையே! உண்டி யல் பெட்டியில் ஓட்டை இருப்பது போலத்தான் என் மூக்கும் இருக்கிறது! அதனுல் மணற்

காற்று வீசும்போது மூக்கை நான் இறுக மூடிக் கொண்டு விடுவேன். ஒரு தூசுகூட என் மூக்குக் குள்ளே நுழைய முடியாது!

மணற் காற்று அடிக்கும்போது, என் எஜமானர் என்ன செய்வார், தெரியுமா? தலை முதல் கால் வரை போர்வையை இழுத்துப் போர்த்துக் கொண்டு, என் பக்கத்திலே வந்து கால்களை முடக்கிப் படுத்துக் கொள்வார். காற்று நின்றதும் எழுந்து போர்வையில் உள்ள மண்ணைத் தட்டி விடுவார்.

அரேபியாவில் அடிக்கடி ஒட்டகப் பந்தயம் நடக்கும். அதில் கலந்துகொள்ளும் ஒட்டகங்களுக்குப் 'பந்தய ஒட்டகங்கள்' என்று பெயர். ஆனால், குதிரையைப் போல் அவைகளால் வேகமாக ஓட முடியாது. அதிகமாகப் போனால், மணிக்குப் பன்னிரண்டு மைல் வேகம் போகும்.




அரேபியாவில் 'ஒட்டகச் சண்டை' ஆண்டுக்கு ஒரு முறை நடக்கும். எனக்கு இதிலெல்லாம்

பழக்கமில்லை. ஆனாலும், எனக்குத் தெரிந்த சில நண்பர்கள் நன்றாகச் சண்டை போடுவார்கள். இந்தப் பந்தயத்தில் வெற்றி பெறும் ஒட்டகத்தின் எஜமானருக்குப் பரிசு கிடைக்கும். என்ன பரிசு தெரியுமா ? ஒரு கழுதைதான் பரிசு !

குதிரைச் சவாரி செய்யும்போது, நீங்கள் கால்கள் இரண்டையும் இருபுறமும் தொங்கவிடுகிறீர்கள். ஆனால், எங்கள் மேல் அப்படி உட்கார்ந்து சவாரி செய்யமாட்டார்கள். திமிலில் அமர்ந்து கால்கள் இரண்டையும் பிடரியில் வைத்துக் கொள்வார்கள்.

என் முதுகில் ஏறிச் சவாரி செய்ய உங்களுக்கும் ஆசையாயிருக்கிறதா ? இதோ நான் தயார். ஆனால், குதிரைச் சவாரி போல் இந்தச் சவாரியும் சுகமாக இருக்கும் என்று நினைத்து விடாதீர்கள் ! மிகவும் அசௌகரியமாயிருக்கும். இப்படியும் அப்படியும் அசைந்து அசைந்து நான் செல்வதால், புதிதாகச் சவாரி செய்பவர்களுக்கு மயக்கம்கூட வந்துவிடும் ! "மயக்கம் வந்தால் வரட்டுமே !" என்கிறீர்களா ? சரி, வாருங்கள். தங்கள் வரவு நல் வரவாகுக !





என்னைப் பார்த்தவுடனே, "என்ன இது! எல்லா மிருகங்களுக்கும் தலைக்கு மேலே கொம்பு இருக்கும். இந்த மிருகத்துக்கு மூக்குக்கு மேலே கொம்பு இருக்கிறதே!" என்றுதானே ஆச்சரியப் படுகிறீர்கள்? ஆனால், என் மூக்குக்கு மேலே இருப்பது உண்மையான கொம்பல்ல; உரோமங்கள்தான் ஒன்று திரண்டு கெட்டியாக இறுகிக் கொம்பு போல் தெரிகின்றன. ஆனாலும், அதற்கு வேறு ஒரு பெயர் கிடையாது. அதனால், நானும் அதைக் 'கொம்பு' என்றே கூறிவருகிறேன்.

தலைக்கு மேலே கொம்புகள் இல்லாத போனாலும், அவை இருக்கவேண்டிய இடத்தில் காதுகள் இருக்கின்றனவே, கவனித்தீர்களா?


நான் அஸ்ஸாம் காட்டைச் சேர்ந்தவன். எனக்கும் சரி, இந்தியாவில் உள்ள என் இனத்தாருக்கும் சரி, ஒரு கொம்புதான் இருக்கும். ஆனால், ஆப்பிரிக்கக் காண்டா மிருகத்துக்கு இரண்டு கொம்புகள் இருக்கும். இரண்டும் ஒரே நீளம் இருக்காது; ஒன்று குட்டையாயிருக்கும்; மற்றொன்று நீளமாயிருக்கும். ஒரு கொம்பு 20 அங்குல நீளம் இருந்தால், இன்னொன்று 30 அங்குல நீளம் இருக்கும். 44 அங்குல நீளமுள்ள கொம்புகூட இருக்கிறது!

இந்தக் கொம்புக்காகவே ஆப்பிரிக்காவிலுள்ள சில சாதியார் என் இனத்தவரை வேட்டையாடுகிறார்கள். சாதாரண அம்பினால், அவர்கள் வேட்டையாட மாட்டார்கள். அவர்கள் உபயோகப்படுத்தும் அம்பின் நுனியில் நஞ்சைத் தடவி வைத்திருப்பார்கள். அந்த நஞ்சு உடம்புக்குள் போனால், எந்த மிருகமும் சுருண்டு விழவேண்டியதுதான்!

இந்தக் கொம்பினால் மனிதர்களுக்கு என்ன பயன்? இதை ஒரு வீட்டில் வைத்திருந்தால், அந்த வீட்டுக்காரரைப் பெரிய சூராதி சூரர் என்று நினைக்கிறார்கள். வெற்றிச் சின்னமாக இது விளங்குகிறது. அது மட்டுமா? சில நோய்களைப் போக்கவும் எங்களுடைய கொம்பு மருந்தாக உதவுகிறது. இப்படி எங்களுடைய கொம்பை மட்டும்தானா மருந்தாக உபயோகிக்கிறார்கள்? இல்லை; எங்களுடைய எலும்பு, இரத்தம், மூத்திரம் எல்லாவற்றையுமே மருந்தாக உபயோகிக்கிறார்கள்!

என் உருவத்தைப் பார்த்தவுடனே, "இவ்வளவு பெரிய மிருகமாக இது இருக்கிறதே, ஒரு


நாளைக்கு எத்தனை மிருகங்களை அடித்துச் சாப் பிடுமோ !'' என்றுதானே நினைக்கிறீர்கள் ? நீங்கள் நினைப்பது தவறு.



சென்னையில் இருக்கிறதே மிருகக் காட்சி சாலை, அங்கே போய்ப் பாருங்கள்; உண்மை தெரியும். அங்கே உள்ள காண்டா மிருகத்திற்கு என்னென்ன உணவு கொடுக்கிறார்கள் என்று அங்கே ஒரு பலகையில் எழுதி வைத்திருப்பதாகக் கேள்வி.

200 பவுண்டு புல், 4 படி வெல்லம் கலந்த காரரிசி, 2 வீசை காரட்டு, உருளைக் கிழங்கு, வாழைப் பழம்—இவ்வளவும் தினசரி கொடுக்கிறார் களாம். மாமிசம் கொடுப்பதாக இருந்தால், அதை யும் எழுதி வைத்திருப்பார்கள் அல்லவா ? நாங்கள் மாமிசம் சாப்பிட்டால்தானே அவர்கள் எழுதி வைப்பார்கள் ?

என் உடம்பைப் பார்த்தால் இரும்புக் கவசம் மாட்டியிருப்பது போல் தோன்றுகிறதல்லவா ? உடம்பெல்லாம் குமிழ் குமிழாகவும் இருக்கிறது. ஆப்பிரிக்கக் காண்டா மிருகத்திற்கு என் உடம்பில்



இருப்பதைப் போல் மடிப்பு இருக்காது. அதன் பருமனும் கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கும். எதிரிகள் அருகிலே வந்தால் அது தன்னுடைய நீளமான கொம்புகளால் விரட்டி ஓட்டும். ஆனால், என் கொம்பு சிறிதாயிருப்பதால், நான் கொம்பை உபயோகிக்க மாட்டேன். என்னுடைய கூர்மையான கோரைப் பற்களைத்தான் உபயோகிப்பேன்.

ஒரு நாள், நான் தரையிலே படுத்திருந்தேன். அப்போது, திடீரென்று ஏதோ ஒரு சத்தம் கேட்டது. உடனே நான் விருட்டென்று எழுந்தேன்; வேகமாக ஓடினேன். எதிரே யாரோ வருவது போல் தெரிந்தது. ஓங்கி ஒரு முட்டு முட்டினேன். "டங்...." என்று சத்தம் கேட்டது. என் தலையும் வலித்தது. அப்போதுதான் அது ஒரு மரம் என்பது எனக்குத் தெரிந்தது. இது போல் அடிக்கடி நான் தவறாக முட்டிக் கொள்வதுண்டு. காரணம், வேறொன்றும் இல்லை. எனக்குப் பார்வை கொஞ்சம் மந்தம். பார்வை மந்தமாக இருந்தாலும் வாசனை அறியும் சக்தியும், கேட்கும் சக்தியும் எனக்கு அதிகம். ஏதேனும் சத்தம் கேட்டால், காதுகள் இரண்டையும் நன்றாக நிமிர்த்தி வைத்துக்கொண்டு உற்றுக் கேட்பேன்.

என் உடம்பு மிகப் பருமனாகவும், கால்கள் குட்டையாகவும் இருப்பதால், 'எப்படித்தான் இந்த மிருகம் இந்த உடம்பைத் தூக்கிக்கொண்டு நடக்கிறதோ!' என்று சிலர் அனுதாபப்படுகிறார்கள்.

அப்படி அனுதாபப் படுகிறவர்கள் என்னுடன் ஓட்டப் பந்தயம் வந்து பார்க்கட்டும். மணிக்கு 25 மைல் வேகம் ஓடுவேன் நான்!


சகதியில் படுத்துப் புரளுவதென்ருல் எனக்குக் கொண்டாட்டம்தான். சந்தனம் பூசுவது போல் சகதியை உடம்பெல்லாம் பூசிக்கொண்டு தரையிலே விழுந்து புரளுவேன். புழுதியெல்லாம் உடம்பில் ஒட்டிக்கொள்ளும். இப்படி நான் செய்யாவிடில், சில பூச்சிகள் என் உடம்பில் ஏறி, மடிப்புக்குள் புகுந்துகொண்டு அங்கேயே குடியிருக்க ஆரம்பித்து விடுகின்றன! என்னைத் தூங்கவிடாமல் அந்தப் பூச்சிகள் 'நறுக், நறுக்' கென்று கடித்துத் தொந்தரவு செய்கின்றன.

சில சமயங்களில் எனக்குச் சகதி அகப்படாது. அப்போது இந்தப் பூச்சிகள் என்னைப் படாத பாடு படுத்தி விடும். அந்த மாதிரிச் சமயங்களில் எனக்கு உதவியாகச் சில பறவைகள் வரும். அவை என் உடம்பில் உட்கார்ந்துகொண்டு, மடிப்புகளுக்குள் மறைந்து கொண்டிருக்கும் பூச்சிகளைக் கொத்திக் கொத்தித் தின்னும்.

இந்தப் பறவைகள் எனக்கு இன்ஞெரு உதவியும் செய்கின்றன. எதிரிகள் தூரத்தில் வரும் போதே இவை பார்த்து விடுகின்றன. உடனே இறக்கைகளைப் படபடவென்று அடித்துக் கத்தத் தொடங்குகின்றன. பார்வை மந்தமாக உள்ள எனக்கு இது எவ்வளவு உதவியாயிருக்கிறது, தெரியுமா? உடனே நான் எதிரியை எதிர்க்கவோ அல்லது எதிர்த் திசையில் ஓடவோ தயாராகலாம் அல்லவா?

“ஆமாம், ஆமாம்” என்று நீங்கள் மெதுவாகச் சொல்லுகிறீர்களே ! எவ்வளவு மெதுவாக நீங்கள் சொன்னால்தான் என்ன ? எனக்குத்தான் காது நன்றாகக் கேட்குமே !





உங்களில் யாராவது நெட்டையாக வளர்ந் திருந்தால், "அவனைப் பாரடா. ஒட்டைச் சிவிங்கி மாதிரி இருக்கிருன் !" என்று கிண்டல் செய் கிறீர்கள். ஆனுல், என் உயரம் வளர எவராலுமே முடியாது. ஆமாம், உலகத்திலே உயரமான மிரு கம் நான்தானே ! கால் முதல் தலை வரை அளந்து பாருங்கள். சரியாகப் பதினெட்டு அடி இருப்பேன். என் கன்னத்திலே நீங்கள் அன்பாகத் தட்டிக் கொடுக்கவேண்டுமானுல், முதலிலே ஒரு பெரிய ஏணியைத் தேடிப் பிடிக்கவேண்டும் !

மிகவும் உயரமாக இருப்பதால், மரத்திலுள்ள இலைகளைப் பறிப்பது எனக்கு மிகவும் சுலபம். அது மட்டுமா ? எதிரிகள் தூரத்தில் வரும்போதே


எனக்குத் தெரிந்துவிடும். அடிக்கடி கழுத்தை நாலா பக்கமும் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொள்வேன்.

நான் தண்ணீர் குடிப்பதை எப்போதாவது நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அது உங்களுக்கு வேடிக்கையாகத் தோன்றும். ஆடு மாடு குடிப்பது போல் நான் குடிக்கமாட்டேன். என் முன்னங் கால்கள் இரண்டையும் அகல வசத்தில் பரப்பி வைத்துக் கொள்வேன். நன்ருகக் கீழே குனிந்து நீரைக் குடிப்பேன். முன்னங் கால்களை அப்படி வைத்துக் கொள்ளாதபோஞல், என் வாய்க்குத் தண்ணீர் எட்டவே எட்டாது. தரையிலுள்ள புல் பூண்டுகளைத் தின்னும் போதுகூட இப்படித்தான் செய்வேன்.

என் கால்களுக்குப் பலம் அதிகம். எதிரிகள் தப்பித் தவறி என் அருகிலே வந்துவிட்டால், உடனே நான் என்ன செய்வேன், தெரியுமா? கடிக்க மாட்டேன், முட்டமாட்டேன். கழுதையைப் போல் 'பட், பட்' டென்று பலமாகக் கால்களால் உதை கொடுப்பேன். என் உதை தாங்காமல் சுருண்டு விழுந்த எதிரிகளுக்குக் கணக்கே இல்லை!

நான் பிறந்ததும் வளர்ந்ததும் ஆப்பிரிக்கா வில்தான். அங்குள்ள வறண்ட பிரதேசத்தில்தான் என் இனத்தைக் காணமுடியும். உலகத்தில் வேறு எந்தக் காட்டில் தேடினுலும், நாங்கள் அகப்பட மாட்டோம். தனியாக வாழ்வதற்கே எங்களுக்குப் பிடிக்காது. கூட்டம் கூட்டமாகவே வசிப்போம். பதினைந்து முதல் எண்பது வரை உள்ள பல கூட்டங்களைக் காணலாம்.

மே மாதமும், ஜூன் மாதமும் எங்களுக்கு மிகவும் முக்கியமான மாதங்கள். அந்த மாதங்களில் தான் எங்களுக்குக் குழந்தை பிறக்கும். ஒரு தாய்க்கு ஒரு சமயத்தில் ஒரே ஒரு குழந்தைதான் பிறப்பது வழக்கம். 'ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு' என்று அதை நாங்கள் அன்பாக வளர்ப்போம்.



பிறந்து மூன்று நாட்கள் வரை அதனல் நகர முடியாது. நாலாவது நாள் எப்படியோ தட்டுத் தடுமாறி எங்களோடு நடக்க ஆரம்பித்துவிடும். அந்தச் சமயம் யாராவது அதைத் தூக்க வந்தால்,

அவர்களை நாங்கள் சும்மா விடமாட்டோம். எங்களுடைய கால்களுக்குச் சரியாக வேலை கொடுத்து விடுவோம் !

"கழுதைக்குக் கொம்பு இல்லை. அதனால் அது காலால் உதைக்கிறது. உனக்குத்தான் கொம்பு இருக்கிறதே! நீயும் ஏன் காலால் உதைக்கிறாய்?" என்றுதானே கேட்கிறீர்கள்? அடடே ! என் தலையில் இருக்கின்றனவே, இவைகளைக் கொம்புகள் என்றா நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? இல்லை, இல்லை. உண்மையில் இவை கொம்புகளே அல்ல. கொம்புகளைப் போல் வளர்ந்திருக்கும் மிருதுவான எலும்புகள் ! உங்களுடைய மூக்கில் இருக்கிறதே குருத்து எலும்பு, அதே போலத்தான்.

எங்களில் சிலருக்கு இந்த மாதிரிக் கொம்புகள் மூன்று இருக்கும். சிலருக்கு நான்குகூட உண்டு. இவற்றால் எங்களுக்கு ஒருவித பயனுமில்லை. ஒரு வேளை இவை இருப்பதால்தான் நாங்கள் அழகாக இருக்கிறோமோ, என்னவோ !

எங்களுடைய முக்கிய உணவு கருவேல இலை தான். கருவேல மரத்தைப் பற்றித்தான் உங்களுக்குத் தெரியுமே. நிறைய முள் இருக்கும். மரத்தில் ஏறினால், 'சுருக் சுருக்'கென்று உடம்பிலே குத்தும். நாங்கள் எதற்காக அதிலே ஏறப்போகிறோம் ? தரையில் நின்றுகொண்டே தலையை நீட்டுவோம். கடவுள் எங்களுக்கு நீளமான நாக்கைத் தந்திருக்கிறார். அந்த நாக்கினால், இலையை வளைத்துப் பறித்து வாய்க்குள்ளே அனுப்புவோம்.

சில சமயம், நாங்கள் ஆசையாக இலையைப் பறித்துக் கொண்டிருக்கும் போது, சிங்கமோ அல்லது சிறுத்தையோ அந்தப் பக்கமாக வரும்.

உடனே நாங்கள் ஓசைப்படாமல் அப்படியே தலையை மரக்கிளைகளுக்குள்மறைத்துக்கொண்டு, அந்த மரத்தைப் போலவே ஆடாமல் அசையாமல் நின்று விடுவோம். சிறிது தூரத்தில் நின்று பார்த்தால், நாங்கள் நிற்பது எதிரிகளுக்குத் தெரியவே தெரியாது. பேசாமல் போய் விடுவார்கள் நாங்கள் தப்பித்துக் கொள்வோம். இப்படி எத்தனையோ முறை தப்பித்திருக்கிறோம்.

எதிரிகள் எங்களைக் கண்டு விட்டார்கள என்பது தெரிந்தால், அந்த இடத்தில் ஒரு விநாடி கூட நிற்கமாட்டோம். நாலு கால் பாய்ச்சலில் காற்ருய்ப் பறப்போம். மணிக்கு 35 மைல் வேகம் போவோம். நாங்கள் அப்படி ஓடும்போது எங்களுடைய வாலைச் சும்மா வைத்திருக்க மாட்டோம். கயிற்றைப் போல் முறுக்கி கார்க் ஸ்குருவைப் போல் வட்ட வட்டமாக வளைத்து வைத்துக் கொள்வோம்.

தண்ணீர் கிடைக்கும் போது. நாங்கள் குடிப்போம். கிடைக்காத போது நாங்கள் அதிகமாகக் கவலைப்பட மாட்டோம். தண்ணீர் இல்லாமல் எங்களால் வாரக் கணக்கிலே காலந் தள்ள முடியும். இந்த விஷயத்தில் ஒட்டகத்தையும் நாங்கள் மிஞ்சி விடுவோம் !

எனக்கு நன்ருக ஓடத் தெரிகிறது; ஒளியத் தெரிகிறது; உதைக்கவும் தெரிகிறது. ஆனல், கத்தத் தெரியுமா ? இந்தச் சந்தேகம் உங்களில் பலருக்கு உண்டு. சிலர், "ஒட்டைச் சிவிங்கிக்குக் குரலே கிடையாது. அதன் வாயிலிருந்து எந்தவிதமான சத்தமும் வெளிவராது" என்று கூறுகிருர்கள். ஆனல், அது சரியல்ல. நான்அடிக்கடி சத்

தும் போடமாட்டேன். அபூர்வமாகத்தான் கத்து வேன். என் சத்தம் சிங்கத்தின் கர்ஜனையைப் போலவோ, கழுதையின் குரலைப் போலவோ பலமாகக் கேட்காது. ஆட்டுக் குட்டி கத்துவது போல் மெதுவாகத்தான் கேட்கும். அதற்காக எனக்குக் குரலே இல்லை என்று கூறி விடுவதா ?

இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் "ஒட்டைச் சிவிங்கி தரையில் படுக்கவே படுக் காது. எப்போதும் நின்றுகொண்டே இருக்கும். தூங்கும் போதுகூட நின்று கொண்டுதான் தூங்கும்" என்கிறார்கள். இதுவும் பொய். நான் தரையிலே நன்றாகப் படுப்பேன். என் உடலை மட்டுமல்ல; கழுத்தையும் நன்றாகத் தரையில் நீட்டிக் கொண்டு இளைப்பாறுவேன்.

உங்களிலே பலர் மிருகங்களை வேட்டையாடிக் கொன்று தின்கிறார்கள். அவர்கள் எங்களையும் விட்டு வைக்க வில்லை. எங்களைச் சாப்பிடுவதற்காக வேட்டையாடி னாலும் பரவாயில்லை. 'போகட்டும். நம் உயிர் போனாலும் அவர்கள் வயிறு வது நிரம்புகிறதே!' என்று ஆறுதல் அடையலாம்.




ஆனால், சாப்பிடுவதற்காக எங்களை அவர்கள் வேட்டையாட வில்லையாம். எங்கள் மாமிசம் நன்றாக இருக்காதாம். பின்னர் எதற்காக

வேட்டையாடுகிருர்கள், தெரியுமா ? எங்களுடைய தோலும், உரோமமும் அவர்களுக்கு மிகவும் பயன்படுகின்றனவாம்.

எங்களுடைய தோல் மிகவும் உறுதியாயிருக்கும். 2 அங்குல கனம் வரை வளரும். இந்தத் தோலால் பலர் கவசம் செய்து போட்டுக் கொள்கிருர்களாம். உரோமத்தால் அழகான வளையல் செய்வார்களாம். அந்த வளையல் ஒரு முக்கியமான வேலையைச் செய்யுமாம்.

ஆப்பிரிக்காவில் சில பழங்குடி மக்கள் இருக்கிருர்கள். அவர்களில் ஒருவன் ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிருன் என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே, அவன் எங்களுடைய உரோமத்தால் செய்த வளையலை அவளுக்குக் கொடுத்து அனுப்புவாளும். அவள் அதை அப்படியே திருப்பி அவனிடம் அனுப்பிளுல், "சரி, நாம் கல்யாணம் செய்து கொள்ளலாம்" என்று அர்த்தமாம்.

அவர்கள் மணம் நடைபெற, நாங்கள் மரணம் அடைய வேண்டுமாம் ! இது என்ன நியாயம் ?





என்னைக் கண்டாலே உங்களுக்கெல்லாம் ஆனந்தம்தான்!

**ஆனை ஆனை அழகர் ஆனை !**
**அழகரும் சொக்கரும் ஏறும் ஆனை !**

என்று பாட ஆரம்பித்து விடுவீர்கள்.

'உலகத்திலே உயரமான மிருகம் நான்தான்' என்று அந்த நெட்டைக் கழுத்து ஒட்டைச்சிவிங்கி பெருமையாகச் சொல்லிக் கொண்டதே, ஆனால், நிலத்தில் வாழும் மிருகங்களிலே மிகப் பெரியது எது என்று சொன்னதா ? அது சொல்லா விட்டால் போகிறது. இதோ, நான் சொல்லு கிறேன். நான்தான் மிகமிகப் பெரிய மிருகம். பார்த்தாலே தெரியவில்லையா ?

காட்டிலே நானும் என் குடும்பத்தாரும் எப்போதும் கூட்டமாகவே இருப்போம். எங்கள் கூட்டத்தில் முப்பது பேர் உண்டு. இரை தேடப் போகும் போதும், தண்ணீர் குடிக்கப் போகும் போதும் நாங்கள் ஒருவர் பின் ஒருவராகப் போவோம். எங்களுக்கு வழி காட்டியாக முன்னால் ஒரு தலைவர் போவார். அந்தத் தலைவர் வயதானவராக இருப்பார். அனுபவமும் அவருக்கு அதிகம். அந்தத் தலைவருக்குப் பின்னால், பெண் யானைகள் தங்கள் குட்டிகளுடன் போகும். அவைகளுக்குப் பின்னால்தான் ஆண்களாகிய நாங்கள் போவோம்.

சில சமயம் வேட்டைக்காரர்கள் காட்டுக்குள்ளே வந்து எங்களைப் பிடிக்கச் சூழ்ச்சி செய்வார்கள். அதனால், அந்தத் தலைவர் காற்று வரும் திசையிலே அடிக்கடி துதிக்கையைத் தூக்கிப் பிடித்து, மனித வாசனை வருகிறதா என்று பார்ப்பார். மனிதர்கள் வருவது தெரிந்தால் துதிக்கையைத் தரையில் ஓங்கி அடிப்பார். கீச்சுக் குரலில் பிளிறுவார். உடனே நாங்கள் எல்லோரும் பத்திரமான இடத்திற்கு நடக்க ஆரம்பித்து விடுவோம். தாவிக் குதித்துச் செல்லவோ, வேகமாக ஓடவோ எங்களுக்குத் தெரியாது. ஆனாலும், வேகமாக நடப்போம். சாதாரணமாக மணிக்கு 7, 8 மைல் நடக்கக் கூடிய நாங்கள் அப்போது 15 மைல் வேகத்தில் செல்வோம்.

வேகமாக நாங்கள் நடக்கும் போது, சில் குட்டிகளால் எங்களைத் தொட்டு நடக்க முடியாது. அப்பொழுது ஒவ்வொரு குட்டியும் தன் தாயின் வாலைத் துதிக்கையால் பிடித்துக்கொண்டே நடக்

கும். தாயும் தன் குட்டியை வாலால் இழுத்துக் கொண்டே போவாள். தானே நடப்பது பாதி, தாயார் இழுப்பது பாதி—இப்படியே ஆபத்தி லிருந்து குட்டிகளும் எங்களோடு தப்பித்துக் கொள்ளும்.

குறுக்கே ஆறு வந்தால், கவலைப் படமாட் டோம். எங்களுக்குத்தான் நன்றாக நீந்தத் தெரி யுமே! வேகமாக நீந்தி அக்கரை போய்விடுவோம். 'இவ்வளவு பெரிய உடம்பைத் தூக்கிக்கொண்டு எப்படித்தான் நீந்துகிறதோ!' என்று ஆச்சரியப் படுகிறீர்களா? செங்குத்தான பாதையில் நாங்கள் ஏறி இறங்குவதைப் பார்த்தால், இன்னும் ஆச்சரி யப்படுவீர்கள். மிகவும் சரிவான இடங்களில், நாங்கள் கால்களைப் பரப்பிக் கொண்டு வயிற்றால் நகருவதைப் பார்த்தால், மேலும் மேலும் ஆச்சரிய மாயிருக்கும்!

என் கண்ணைப் பார்த்து, 'இவ்வளவு பெரிய யானைக்குக் கோலிக் குண்டு போலக் கண் இருக் கிறதே!' என்று பல சிறுவர்கள் வியப்படைகி றார்கள். கண் சிறிதாக இருப்பதால், பார்வையும் கொஞ்சம் மந்தம்தான். கண் சிறிதாயிருந்தாலும், காது எவ்வளவு பெரிதாக இருக்கிறது, பார்த் தீர்களா? முறம் போல் இருக்கிறதல்லவா?

கண், காது இவைகளைவிட எனக்கு மிகவும் அவசியமான பாகம் மூக்குத்தான். என்னுடைய மூக்கு மிக மிக நீளம். "மூக்கா! அது எங்கே இருக் கிறது?" என்று கேட்கிறீர்களா? மூக்காகவும், கையாகவும் எனக்கு உபயோகப்படும் துதிக்கை தான் அது! என் துதிக்கையின் நுனியில் உங் களுக்கு இருப்பதுபோல் ஐந்து விரல்கள் இல்லை.

ஒரே ஒரு சின்ன விரல்தான் உண்டு. துதிக்கையின் நுனியில் கூர்மையாக இருக்கிறதே, அதைத்தான் விரல் என்கிறேன்!


மூச்சு விடவும், வாசனை அறியவும், உணவை வாயில் திணிக்கவும், தண்ணீர் குடிக்கவும், தண்ணீரை எடுத்து உடம்பில் தெளிக்கவும் இந்தத் துதிக்கைதான் உபயோகப்படுகிறது. இதனால், பெரிய பெரிய மரங்களையும் தூக்குவேன். சின்னஞ் சிறிய புல்லையும் பறிப்பேன். எதிரே புலி வந்தால் அதற்கும் என் துதிக்கையால் ஓங்கி ஓர் அறை கொடுப்பேன்!

என் முன்னால் ஒரு சிறு பட்டாணிக் கடலையை நீட்டிப் பாருங்கள்! கீழே விழாமல் அதை நான் எடுத்துத் தின்றுவிடுவேன். தரையில் கிடக்கும் ஊசியைக்கூட என்னால் சுலபமாக எடுத்துவிட முடியும்! என் துதிக்கை நுனியில் இருக்கிறதே சின்னஞ் சிறு விரல், அது அவ்வளவு நுட்பமானது. துதிக்கையால் இன்னொன்றும் செய்வேன். அதுதான் சலாம் போடுவது!

என்னையும் என் தோழர்களையும் 'இந்திய யானைகள்' என்று அழைப்பார்கள். எங்களை இந்தியாவில் மட்டுமல்ல; இலங்கை, பர்மா, மலேயா, சையாம் முதலிய இடங்களிலும் காணலாம். எங்களிலே இன்னொரு வகை உண்டு. 'ஆப்பிரிக்க யானை' என்று அதற்குப் பெயர். இருவருக்கும் என்ன வித்தியாசம்? ஒன்று, இரண்டா? பல வித்தியாசங்கள் உண்டு.

ஆப்பிரிக்க யானைக்குக் காது பெரிதாயிருக்கும். கண்ணும் சற்றுப் பெரிதுதான். உயரமும்

ஓரடி அதிகமாகவே இருக்கும். நாங்கள் பத்தரை அடி உயரம் வளர்ந்தால், அவை பதினெருன்றரை



அடி உயரம் வளரும். துதிக்கை நுனியில் எங்களுக்கு ஒரு விரல்தானே இருக்கிறது? ஆனால், அதற்கு இரண்டு விரல்கள் உண்டு. எங்களில் ஆணுக்கு மட்டும்தான் தந்தம் இருக்கும். ஆனால் ஆப்பிரிக்காவில் ஆண், பெண் இரண்டுக்குமே தந்தம் உண்டு. தந்தம் இல்லாத பெண் யானையை அங்கே அபூர்வமாகத்தான் காணலாம். அவைகளின் தந்தங்கள் எங்களுடைய தந்தங்களைவிட நீளமாகவும், கனமாகவும் இருக்கும்.

தந்தத்தைப் பற்றி நாங்கள் மிகவும் பெருமையாகச் சொல்லிக்கொள்கிறோம். ஆனால், இதற்கு ஆசைப்பட்டுத்தானே நீங்கள் எங்களை வேட்டையாடுகிறீர்கள்? இந்தத் தந்தத்தால் எத்தனையோ சாமான்களைச் செய்கிறீர்கள். எல்லாம் விலை உயர்ந்த சாமான்கள்! அழகான சாமான்கள்!

எங்கள் கூட்டம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. நாங்கள் போகும் வழியில் ஆழமாகக் குழி வெட்டி, இலை தழைகளை அதன் மேல் பரப்பி, எங்கள் கூட்டத்தைச் சேர்ந்த சிலரைத் தந்திரமாக மனிதர்கள் பிடித்துச் சென்று விடுகிறார்கள். அப்படிப் போனவர்களில் பலரை எப்படியோ மனிதர்கள் மயக்கித் தங்களுக்கு அடிமையாக்கி விட்டார்களாம். அவர்களில் சிலர் பாரம் தூக்குகிறார்களாம். சிலர்,புலி வேட்டைக்குப் பயன்படுகிறார்களாம். வேறு சிலர் முகபடாம் தரித்துக்கொண்டு, முதுகில் அம்பாரியுடன் ஊர் வலத்தில் செல்கிறார்களாம்; சர்க்கஸில்கூட சிலர் வித்தை காட்டி வருகிறார்களாம்; இன்னும் சிலர் கோயில்களுக்கே சொந்தமாகி விட்டார் களாம்! முன் காலத்தில் யுத்தம் செய்வதற்குக் கூட எங்கள் இனத்தவர் உதவினராம்! குதிரைப் படை, யானைப்படை என்று கேள்விப் பட்டிருப் பீர்களே!

புலி, சிங்கத்துக்கெல்லாம் நாங்கள் பயப்படு வதே இல்லை. ஆனாலும், இந்த உலகிலே எங்களுக் குச் சில பகைவர்கள் உண்டு. அவர்களில் முக்கிய மானவர்கள் மூவர்.

விஷப் பாம்பு எங்களுக்கு ஒரு விரோதி. அது புல் தரைகளுக்கு நடுவே ஓசைப்படாமல் வந்து, எங்களுடைய துதிக்கையின் நுனியில் கடித்து விடும். அதில் பிழைத்துவிட்டால், மறு பிழைப்புத் தான்!

இன்னொரு விரோதி தீ எறும்பு. அது எங்கள் துதிக்கை மேல் ஏறி, நறுக் நறுக்கென்று நன்றாகக்


கடித்துவிடும். அந்தக் கடியை எங்களால் தாங்கவே முடியாது. சில சமயம் எங்களுக்குப் பைத்தியம்கூடப் பிடித்துவிடும்!

மூன்ருவது விரோதி ஒன்று உண்டு. அது செயற்கை விரோதி. அது மனிதர்களுடைய துப்பாக்கியிலிருந்து வரும் குண்டுதான்!

இந்த மூன்றைத் தவிர எதற்குமே நாங்கள் அதிகமாகப் பயப்படுவதில்லை.

உங்களை யெல்லாம் உங்கள் அம்மாக்கள் பத்து மாதம் சுமந்து பெற்றிருப்பார்கள். ஆனல் என் அம்மா என்னை அதைப் போல் இரு மடங்கு மாதங்கள்—அதாவது இருபது மாதங்கள்—சுமந்து பெற்ருள். நான் பிறக்கும்போது தனியாகத்தான் பிறந்தேன். நான் பிறப்பதற்கு 4 ஆண்டுகளுக்கு முன்னல், என் அம்மாவுக்கு இரட்டைப் பிள்ளைகள் பிறந்தனவாம். எங்கள் இனத்தில் தடவைக்கு ஒரு பிள்ளைதான் சாதாரணமாகப் பிறக்கும். இரட்டைப் பிள்ளை பிறப்பது அபூர்வமே!


நான் பிறப்பதற்குச் சிலநாட்களுக்கு முன்னல், என் அம்மா என்ன செய்தாளாம், தெரியுமா? தன் கூட்டத்தாரை விட்டுக் காட்டுக்குள்ளே வெகு தூரம் சென்ருளாம். அடர்த்தியான ஓர் இடத்திலே போய், அங்கே தான்மட்டும் தனியாகவே



தங்கியிருந்தாளாம். என்னை எதிர் பார்த்துத்தான் அவள் அப்படிச் செய்திருக்கிறுள். சில நாட்களில் நான் பிறந்துவிட்டேன்.


பிறந்து இரண்டு நாட்கள் வரை, என்னுல் எழுந்து நிற்க முடியவில்லை. படுத்தபடியே இருந் தேன். என் மேல் ஈ மொய்க்காதபடி அம்மா துதிக் கையால் வீசிக்கொண்டே யிருந்தாள். என் உடம் பிலே மிருதுவான கொழுந்து மணலைப் போட்டுப் பக்குவமாகத் தேய்த்துவிட்டாள். முதல் பத்து நாட்கள் பாலைக் குடிப்பதும் தூங்குவதுமாகவே பொழுது போக்கினேன். பால் குடிப்பது என்றதும் துதிக்கையால் குடித்திருப்பேன் என்றுதானே நினைக்கிறீர்கள்? இல்லை. வாயால்தான் குடித் தேன்! அம்மா மடியிலிருந்த இரண்டு காம்புகளை யும் சப்பி சப்பிக் குடித்தேன்.


பசுவின் மடியைப் போல் என் அம்மாவுக்கு இருக்காது. குரங்குக்கு இருப்பது போல முன் கால்களுக்குச் சிறிது பின்னுல் வலது புறம் ஒரு காம்பும், இடது புறம் மற்ருெரு காம்பும் இருக்கும்.



பத்து நாட்களான பிறகு, அம்மாவோடு நானும் நடக்க ஆரம்பித்தேன். ஆனாலும், அப் போது என்னால் வெகுதூரம் போக முடியவில்லை. மெதுவாக நடந்து நடந்து நானும் அம்மாவும் அவளுடைய பழைய தோழர்களுடன் வந்து சேர்ந்து கொண்டோம். நான் அந்தக் கூட்டத் தில் நுழைந்ததும்,எல்லோரும் என்னைப் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார்கள். அந்தக் கூட் டத்தில் என்னைப் போல் இன்னும் சில குட்டிகள் இருந்தன. ஏதாவது ஆபத்து என்று தோன்றி னால், பெரியவர்களெல்லாம் குட்டிகளாகிய எங்களை நடுவே விட்டுச் சுற்றிலும் வட்டமாக நின்று கொள்வார்கள்.

நான் ஏதாவது தவறு செய்தால், என் அம்மா துதிக்கையால் என்னை அடிப்பாள். மகிழ்ச்சி ஏற்பட்டால், துதிக்கையால் என்னைத் தடவிக் கொடுப்பாள். அடிக்கிற (துதிக்)கைதானே அணைக்கும்!





"அம்மா, அம்மா, அதோ பாரம்மா. கழுதை மேலே கறுப்புக் கறுப்பாய்க் கோடு போட்டிருக்கு!" என்று ஒரு குரல் கேட்டது.

மிருகக் காட்சி சாலையில் வேலிக்குள் நின்று கொண்டிருந்த நான் நிமிர்ந்து பார்த்தேன். ஒரு சிறுவனும் அவன் அம்மாவும் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

"இது கழுதை இல்லேடா கண்ணு. உடம்பைப் பார். எப்படிப் பளபளப்பாக இருக்கிறது! இந்த மிருகக் காட்சி சாலையிலே புலிக்கு அடுத்தபடி அழகான மிருகம் இதுதான். இதன் பெயர்தான் வரிக்குதிரை!" என்றாள் அம்மா.


உடனே அந்தப் பையன் வாய் விட்டுச் சிரித்தான். சிரித்துக்கொண்டே, "வரிக் குதிரையா! இதற்கும் குதிரைக்கும் என்னம்மா சம்பந்தம்? அசல் கழுதை மாதிரியே இருக்கிறது. இது வரிக் குதிரை இல்லையம்மா. வரிக் கழுதை! இதுதான் சரியான பெயர்" என்றான். பையன் பேச்சைக் கேட்டு அம்மாவும் சிரித்தாள்.

எனக்குக் கோபம் கோபமாக வந்தது. உடனே அந்தப் பையனுக்குச் சுடச் சுடப் பதில் கொடுக்க வேண்டும் போல் தோன்றியது. "நானா கழுதை? கழுதையைப் போல் நான் காகிதத்தைத் தின்கிறேனா? இல்லை; கற்றாழையைத் தின்கிறேனா? வேண்டுமானால், இந்த மிருகக் காட்சி சாலையில் வேலை செய்கிறவர்களைக் கேட்டுப் பார். புல், பூண்டு, காரட், கோதுமைத் தவிடு—இவைகளைத்தான் நான் தின்கிறேன்" என்று சொல்ல நினைத்தேன். ஆனாலும் சொல்ல வில்லை. காரணம், அந்தப் பையன் சொன்னதிலும் ஓரளவு உண்மை இருப்பதால்தான்! ஒரு விதத்தில் நான் கழுதை இனத்தைச் சேர்ந்தவன்தானே?

சாப்பாட்டில் மட்டும்தானா? இன்னும் எத்தனையோ விஷயங்களில் எனக்கும் கழுதைக்கும் வேறுபாட்டைக் காணலாம். கழுதை நன்றாகப் பொதி சுமக்கும்; எஜமானனுக்குப் பணிந்து நடக்கும். நான் கொஞ்சம் முரடன். என்னைப் பழக்குவது சுலபமல்ல. அடிமையாக வாழ்வது எனக்குப் பிடிக்கவே பிடிக்காது.

இந்த மிருகக் காட்சி சாலைக்கு வருவதற்கு முன்பு, ஆப்பிரிக்காவில் ஒருவர் என்னைக் காட்டிலிருந்து பிடித்துவந்து வீட்டிலே வளர்த்தார்.

வண்டியிலே போட்டுப் பழக்கினுர். நானும் குதி ரையைப் போல நன்ருகத்தான் வண்டி இழுத் தேன். அவர் என்னைச் சில சமயங்களில் சாட்



டையால் அடித்துத் தொந்தரவு செய்வார். எனக் குப் பொல்லாத கோபம் வந்து விடும். சமயம் பார்த்துப் பின்னங் காலால் அவருக்கு நல்ல உதை கொடுப்பேன். தீனி போடும்போது பல்லால் அவர் கையைக் கடித்து விடுவேன். என் தொந்தரவு பொறுக்க மாட்டாமல்தான் அவர் என்னை விற்று விட்டார்.

அபூர்வமான மிருகங்களெல்லாம் பிறக்கின்ற ஆப்பிரிக்காவில்தான் நானும் பிறந்தேன். அங் குள்ள காடுகளில்தான் என் இனத்தைக் காண லாம். ஆட்டு மந்தையைப் போல் கூட்டம் கூட்ட மாக நாங்கள் காட்டிலே திரிவோம்.

சிங்கத்திற்கு எங்களை அடித்துச் சாப்பிடு வதிலே அபாரமான ஆசை. பாதாம் அல்வாவை


நீங்கள் எவ்வளவு விருப்பமாகச் சாப்பிடுகிறீர்கள்? அவ்வளவு விருப்பமாக எங்கள் மாமிசத்தைச் சிங்கம் சாப்பிடும். கூட்டமாக நாங்கள் இருக்கும் போது சிங்கம் எங்களிடம் வருவதற்கு யோசிக்கும். தனியாக இருந்தால், ஆபத்துத்தான் !

ஒரு தடவை, நான் தனியாக மேய்ந்து கொண்டிருந்தேன். அப்போது பின்னால் யாரோ வருவது போல் தெரிந்தது. சிறு சத்தமாக இருந்தாலும் எனக்குத் தெரிந்துவிடும். அதற்காகத்தானே கடவுள் எனக்கு இவ்வளவு நீளக் காதுகளைக் கொடுத்திருக்கிறார் ?

சத்தம் கேட்டதும் திரும்பிப் பார்த்தேன். ஆ! ஆபத்து ! ஆண் சிங்கம் ஒன்று என்னை நோக்கிப் பாய வந்தது. உடனே எடுத்தேன் ஓட்டம். மணிக்கு 40 மைல் வேகம்தான் என்னால் ஓட முடியும். ஓடினேன், ஓடினேன். சிங்கமும் விடவில்லை துரத்தியது. மிகவும் நெருங்கி வந்துவிட்டது ஒரு விநாடி தாமதித்தாலும், ஆபத்து ! மேலே பாய்ந்து பிடரியைப் பிடித்துக் கடித்துவிடும். ஆனால், நானா அதற்கு இடம்கொடுப்பேன்? சிங்கம் நெருங்கி வந்ததும், பின் கால்களால் ஓங்கி ஓர் உதை கொடுத்தேன். சிங்கம் வலி தாங்காமல் அங்கேயே உட்கார்ந்துவிட்டது. நான் நாலுகால் பாய்ச்சலில் ஓடி வந்துவிட்டேன்.

பிறந்து ஏழு எட்டு மாதம் ஆன பிறகுதான் நீங்களெல்லாம் நிற்கிறீர்கள். அப்புறம்தான் நடக்கிறீர்கள். ஆனால், பிறந்த அன்றைக்கே என்னால் நிற்க முடிந்தது; நடக்க முடிந்தது; ஓடக்கூட முடிந்தது. மனிதரைப் போல் என்னை இடுப்பிலே தூக்கி வைத்துக்கொள்ள என் அம்மாவால் முடி

யுமா? அல்லது, கங்காருவைப் போல் பைக்குள்ளே வைத்துக்கொள்ளத்தான் முடியுமா? அதனால்தான



பிறந்தவுடனே ஓடக்கூடிய சக்தியை எங்களுக்கு ஆண்டவன் கொடுத்திருக்கிறார். சிங்கமோ, சிறுத்தையோ வந்தால் ஓட வேண்டுமல்லவா ?

எங்களிலே சிறு குட்டிகள் ஒன்றுடன் ஒன்று சண்டை போடுவதுண்டு. மனிதர்கள் குஸ்திச் சண்டை போடுவது போல் அந்தக் காட்சி இருக்கும். ஆனால், இந்த குஸ்திச் சண்டையில் ஒருவரை ஒருவர் கடிக்கக் கூடாது என்று சட்டம் எதுவும் இல்லை. அதனால், சில சமயம் ஒன்றை ஒன்று நன்றாகக் கடித்து விடுவதும் உண்டு !

ஆப்பிரிக்காவில் சில பேராசைக்காரர்கள் இருக்கிறார்கள். எங்கள் இனத்தை வேட்டையாடி அவர்கள் நிறையச் சம்பாதிக்கிறார்கள். எங்

களுடைய மாமிசம் மனிதருக்குப் பிடிக்காதாம். தோலையும் பதனிட முடியாதாம். ஆனாலும், எங்களுடைய கொழுப்பு இருக்கிறதே, அதற்கு கிராக்கி அதிகம். கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள பூர்வ குடிகளுக்கு அது ஒரு சிறந்த மருந்தாக உதவுகிறது. சிறிய அளவு கொழுப்புக்கு அவர்கள் நிறையப் பணம் கொடுப்பார்கள். காச நோய்க்கு இது கை கண்ட மருந்தாம்!

உங்களைவிட இரண்டு மாதங்கள் அதிகமாகக் கர்ப்பத்தில் இருந்தவன் நான். அதற்காக இந்த உலகத்திலும் உங்களைவிட அதிக நாள் உயிரோடு இருக்க முடியுமா, என்ன? என் ஆயுள் காலமே இருபது ஆண்டுகள்தானே!





கைகளின் உதவியில்லாமலே உங்களால் கண்களை மூடிக்கொள்ள முடிகிறது. ஆனால், காதுகளை அப்படி மூடிக்கொள்ள முடியுமா? அல்லது, மூக்கை மூடிக்கொள்ள முடியுமா? உங்களால் முடியாது. ஆனால், என்னால் முடியும். ஆம், உண்மையைத்தான் சொல்லுகிறேன். நான் தண்ணீருக்குள் இருக்கும்போது காதுகளையும், மூக்கையும் இறுக மூடிக்கொள்வேன். ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அவைகளுக்குள் புக முடியாது!

பகல் நேரம் முழுவதும் நான் தண்ணீருக்குள்ளேதான் இருப்பேன். இரண்டு நிமிஷத்துக்கு ஒருமுறை தண்ணீருக்கு வெளியே தலையைத்

தூக்குவேன். மூச்சு விட்டுவிட்டுத் திரும்பவும் தண்ணீருக்குள் தலையை இழுத்துக் கொள்வேன்.

தண்ணீருக்குள் இருக்கும்போது எனக்குப் பலம் அதிகம். தரையில் என்றால் வேகமாக நடக்க முடியாது. ஆனால், தண்ணீரில் வேகமாக நடப்பேன்; விரைவாகவும் நீந்துவேன்.

பகல் முழுதும் நீரில் கிடந்தாலும், சூரியன் மறைந்ததும் வெளியில் வந்துவிடுவேன். அங்குமிங்கும் அலைந்து இரை தேடுவேன். தினமும் 400 பவுண்டுக்குக் குறையாமல் ஆகாரம் சாப்பிடுவேன். அதற்குக் குறைந்தால், என் பசி அடங்காது. நெல் முதலிய தானியங்களையும், கரும்பு, செடி, கொடி முதலியவற்றையும் தின்பேன். இரை தேடுவதற்காக நான் சிலசமயம் 20, 30 மைல் கூட நடந்து போய்வருவேன். அந்தச் சமயம், என்னுடைய பெருமூச்சும், உறுமலும் ஒரு மைல் தூரத்துக்கு நன்றாகக் கேட்கும்.



வயல்களுக்குள் நான் புகுந்துவிட்டால், பயிர்களெல்லாம் அடியோடு நாசம்தான். நான் தின்பதைவிட என் கால்கள் பட்டு நாசமாகும் பயிர்களே அதிகமாயிருக்கும்.

என் வாயைப் பார்த்தீர்களா ? எவ்வளவு பெரி தாயிருக்கிறது! பிராணிகளிலே திமிங்கலத்திற்கு அடுத்தபடி பெரியது என் வாய்தான். மூன்று சக்கர சைக்கிள் வண்டியை என் வாய்க்குள் நிறுத்தி, அதன் மேல் ஒரு சிறுவன் அல்லது சிறுமி தாராளமாக உட்கார்ந்து கொள்ளலாம். தலையில் இடிக்காது. அவ்வளவு பெரியது என் வாய் ! என் வாய்மட்டும்தானா பெரியது? நான் விடும் கொட்டாவிகூடப் பெரிதாகவே இருக்கும் !

சிலர் சொல்லுகிறார்கள், என்னுடைய வாய் என்னுடைய உடம்புக்குத் தக்க அளவிலே இல்லையாம். உண்மைதான்; ஒப்புக் கொள்ளுகிறேன். வாய் பெரிதாயிருப்பதால், தலையும் பெரிதாயிருக்கிறது. இந்தப் பெரிய தலையைத் தூக்கிக்கொண்டு நிற்பதே எனக்குச் சிரமமாகத்தான் இருக்கிறது. அதனால்தான் பூமியில் நிற்கும்போது அடிக்கடி தரையின் மேல் அல்லது மரத்தின்மேல் தாடையை வைத்துக் கொண்டு நிற்கிறேன்.

எனக்கு இவ்வளவு பெரிய வாயைக் கொடுத்த கடவுள், வால் விஷயத்திலும் கொஞ்சம் தாராளமாக இருந்திருக்கலாம். மிகவும் சிக்கனத்தைக் காட்டிவிட்டார். பன்றி வால்போல் எட்டு அங்குல நீளமே வைத்திருக்கிறார் !

பன்றியைப் பற்றிச் சொன்னதும், பன்றிக்கும் எனக்கும் என்ன உறவு என்ற ஆராய்ச்சியில் இறங்கிவிடாதீர்கள்! பன்றிக்கும் எனக்கும் நெருங்கிய உறவு இல்லை. எட்டத்து உறவுதான். ஆனாலும் ஐரோப்பியரில் சிலர் என்னை, 'ஆற்றுப் பன்றி' என்று அழைக்கிறார்கள். ஆனால், நீங்கள் மிகவும் நல்லவர்கள். நல்லவர்களாக இருப்பதால்தான்

நீங்கள் என்னை 'ஆற்றுப் பன்றி' என்று அழைக்காமல் 'நீர் யானை' என்று கௌரவமாக அழைக்கிறீர்கள்.

உண்மையிலே யானைக்கு அடுத்தபடி பெரிய மிருகம் நான்தான். யானைக்கும் எனக்கும் உருவத்தில் ஓரளவு ஒற்றுமை இருந்தாலும், நான் யானையைப் போல் முதலையைக் கண்டு பயப்பட மாட்டேன். முன்னொரு காலத்தில் கஜேந்திரன் என்ற யானையின் காலை முதலை கவ்விப் பிடித்துக் கொண்டதாம். கஜேந்திரன் தப்ப வழி தெரியாமல் 'ஆதிமூலமே!' என்று கதறி விஷ்ணுவை அழைத்ததாம். விஷ்ணு உடனே ஓடோடி வந்து, தம்முடைய சக்கராயுதத்தால் முதலையைக் கொன்று, கஜேந்திரனைக் காப்பாற்றினாராம்.—இப்படி ஒரு கதை சொல்லுகிறீர்களல்லவா? ஆனால், அந்த முதலையின் ஜம்பம் என்னிடம் பலிக்காது!

என்னைக் கண்டாலே முதலை பயந்து நடுநடுங்கும். ஒரு சமயம், ஒரு பொல்லாத முதலை என் அருகில் வந்தது. உடனே, நான் என் பெரிய வாயால் அதன் முதுகைப் பலமாகப் பிடித்துக் கொண்டேன். என்னுடைய கோரைப் பற்களால் அதன் முதுகு ஓட்டைக் கடித்து நொறுக்கி, அன்றே அதை எமலோகத்துக்கு அனுப்பிவிட்டேன். முதலைகள் நிறைய இருக்கும் ஆற்றில் கூட நாங்கள் கவலையில்லாமல் வாழ்வோம்!

நானும் என் இனத்தவரும் கூட்டம் கூட்டமாக ஆப்பிரிக்காவிலுள்ள ஏரிகளிலும், ஆறுகளிலும் நிம்மதியாகப் பகல் நேரத்தில் தூங்கிக்கொண்டிருப்போம். அப்போது எதிர்பாராத விதமாக அந்தப் பக்கமாக ஒரு படகு வந்துவிட்டால், அதன்

கதி அதோ கதிதான்! படகைக் கவிழ்த்து, உள்ளே இருக்கும் எல்லோரையும் மூழ்கடித்து விடுவோம்.



நானும் என் இனத்தவரும் பயிர்களை நாசம் செய்வதால், குடியானவர்களுக்கெல்லாம் எங்கள் மீது சொல்ல முடியாத கோபம். எங்களில் எத்தனையோ பேரை அவர்கள் வேட்டையாடிக் கொன்றுவிட்டார்கள். ஆப்பிரிக்காவிலுள்ள பூர்வ குடி மக்களுக்கு எங்கள் மாமிசம் மிகவும் பிடிக்கும். அதற்காகவும் அவர்கள் வேட்டையாடுவார்கள்


எங்களுடைய தந்தப் பற்களுக்கு முன்பெல்லாம் அதிக கிராக்கி இருந்தது. யானைத் தந்தத்தைப் போல் அதிலும் பல சாமான்கள் செய்து வந்தார்கள். இப்போது அதற்கு அவ்வளவு கிராக்கியில்லை. எங்களுடைய தோலுக்குத்தான் இப்போது மதிப்பு அதிகம். மற்ற மிருகங்களின் தோல்களையெல்லாம் பதனிட்டு உபயோகப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால், சில நாட்களில் கரடு முரடாகிவிடும். ஆனால், எங்களுடைய தோல் எப்போதும் வழவழப்பாகவும் எளிதில் வளையக்

கூடியதாகவும் இருக்கும். சவுக்கு செய்வதற்கு எங்களுடைய தோலைப் போல் வேறு தகுதியான தோல் இந்த உலகத்திலேயே இல்லையாம்!

எட்டு மாதம் சுமந்து பெற்றேன என் அருமைக் குழந்தையை. அது நடப்பதற்கு முன்பே நீந்த ஆரம்பித்துவிட்டது! சில சமயங்களில் நான் அதை என் முதுகில் சுமந்து கொண்டே நீந்துவேன். வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு அக்காட்சி வேடிக்கையாயிருக்கும். வாத்து தண்ணீரில் நகருவதுபோல், என் குழந்தையும் தண்ணீரில் தானுக நகருகிறதோ என்றுகூடச் சிலர் சந்தேகப்படுவார்கள். என் குழந்தைக்குப் பசி எடுத்தால், தண்ணீரில் இறக்கிவிடுவேன். தண்ணீருக்குள் இருந்தபடியே அது என்னிடம் பால் குடிக்கும்!

ஆனாலும், எத்தனை நாட்களுக்குப் பாலைக் குடித்துக்கொண்டே இருப்பது? இரை தேடத் தெரியவேண்டாமா? இன்னும் சில நாட்கள் சென்றதும், நான் அதை இரவு நேரத்தில் வெளியிலே அழைத்துச் செல்வேன். எங்கெங்கே உணவு கிடைக்கும் என்பதையும் சொல்லிக் கொடுப்பேன்.

இதை யெல்லாம் நான்தானே சொல்லிக் கொடுக்க வேண்டும்? வேறு யார் சொல்லிக் கொடுப்பார்கள்?



இப்பொழுது பூஜை வேளையோ ?

இல்லையே ?

அப்படியானல் சரி. என் கதையைக் கேளுங்கள்.

'பூஜை வேளையில் கரடி புகுந்தது போல்' என்ற பழமொழியை ஆரம்பித்து விடுவீர்களோ என்று பயந்துதான் இப்படிக் கேட்டேன். வேறென்று மில்லை.


கன்னங் கரிய என் உருவத்தைப் பார்த்தால், உங்களுக்குப் பயமாக இருக்கிறதா ? பயப்படா தீர்கள். நான் வீண் வம்புக்கு வரமாட்டேன். என் வேலை உண்டு; நான் உண்டு என்றுதான் இருப்பேன். ஆனல், யாராவது வீண் வம்புக்கு

வந்தால், சும்மா விடமாட்டேன். என்னை வேட்டையாட வந்தாலோ அல்லது என் குட்டிகளைத் தூக்கப் பார்த்தாலோ எனக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்துவிடும். மூர்க்கத்தனமாகத் தாக்குவேன். அப்போது 12 அடி தூரம்கூடப் பாய்வேன்.

நான் மாமிசம் தின்னும் மிருகம்தான். ஆனாலும் அபூர்வமாகத்தான் மிருகங்களைக் கொல்வேன். நான் அதிகமாக விரும்பிக் கொன்று தின்பது கறையான்களைத்தான். கறையான் புற்று எங்கே இருக்கிறது என்று தேடிக்கொண்டே யிருப்பேன். ஒரு புற்றைக் கண்டுவிட்டால் எனக்குக் கொண்டாட்டம்தான். அந்தப் புற்றை இடிப்பேன். இடித்த பிறகு உள்ளேயிருக்கும் மண்ணையெல்லாம் ஊதி ஊதி வெளியேற்றுவேன். அப்புறம், அங்கேயிருக்கும் கறையான்களை என்னுடைய நீண்ட நாக்கால் பிடித்துத் தின்பேன். நான் கறையான் புற்றிலே ஓங்கி ஓங்கி ஊதும் சத்தம் சிறிது தூரம் வரை நன்றாகக் கேட்குமாம் !

கீழே விழுந்து கிடக்கும் மரங்களையும், பாறைகளையும் கண்டால், நான் சும்மா போகமாட்டேன். அவற்றை ஆசையோடு புரட்டுவேன். அடியில் கறையான், எறும்பு முட்டை, புழு, பூச்சி, வண்டு—இவைகளில் எது இருந்தாலும் சரி, ஆனந்தமாகப் பிடித்துத் தின்பேன்.


தேன் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். ஆனால், எனக்குத் தேன் எப்படிக் கிடைக்கும்? யாராவது புட்டியில் கொண்டுவந்து தருவார்களா ? இல்லை. தேன் கூட்டைக் கலைத்துத்தான் தேனைக் குடிப்பேன். தேன்கூடு மரத்தில்



அல்லவா இருக்கும்? ஆம், எனக்குத்தான் மரம் ஏறத் தெரியுமே! பூனையைப்போல் நன்றாக ஏறுவேன்.

பூனை மரம் ஏறுவதற்கும் நான் மரம் ஏறுவதற்கும் வித்தியாசம் உண்டு. ஒரு சமயம் ஒரு சிறு கிளையில் நான் காலை வைத்து விட்டேன். அது 'சடக்'கென்று முறிந்து விட்டது! நல்ல வேளை; பக்கத்துக் கிளையைப் பிடித்துத் தப்பித்துக்கொண்டேன். தேன் குடிக்கும் ஆசையில் இப்படிச் சில விபத்துக்களுக்கும் ஆளாவதுண்டு!

மரம் ஏறும்போது பூனையைப் போல் ஏறுவதாகச் சொன்னேனல்லவா? ஆனால், இறங்கும் போது பூனைபோல் நான் தலைப் பக்கமாக இறங்க மாட்டேன். வால் பக்கமாகத்தான் இறங்குவேன். அதாவது நீங்கள் இறங்குகிறீர்களே, அப்படித்தான்.



மரத்தில் ஏறி நான் தேன்கூட்டைக் கலைக்கும் போது, தேனீக்கள் சும்மா இருக்குமா ? கொட்டி விடாதா ? ப்பூ ! கொட்டினால் என்ன ? உங்களுக்குத்தான் அது வலிக்கும். எனக்குக் கொஞ்சம்கூட வலிக்காது !

பூக்களும், பழங்களும் நிறைய நிறையத் தின்பேன். பூக்களில் எனக்குப் பிடித்தமானது இலுப்பைப் பூதான். மரம் ஏறிப் பழங்களைப் பறிப்பதும் உண்டு. மரத்தை உலுக்கி, கீழே விழும் பழங்களைப் பொறுக்கித் தின்பதும் உண்டு. கரும்பு தின்பதிலும் எனக்கு ஆசை அதிகம். கரும்புத் தோட்டத்தைத் தேடி அடிக்கடி போவது என் வழக்கம். தேவைக்கு அதிகமாக உணவு கிடைத்தால் நான் சேமித்துவைப்பேன். இலை, தழைகளுக்கு அடியிலே பத்திரமாக வைத்திருப்பேன். பசிக்கும்போது அந்த உணவைச் சாப்பிடுவேன்.


நான் தண்ணீரில் நன்றாக நீந்துவேன். கோடைக் காலத்தில் தண்ணீருக்குள்ளே பல மணி நேரம் இருப்பேன். அதிலே எனக்கு அலாதியான ஓர் ஆனந்தம் !

என் வீடு எது தெரியுமா ? மிகவும் வயதான ஒரு மரத்தின் அடியிலே ஒரு பெரிய பொந்து இருக்கிறது. அதில்தான் நான் வசிக்கிறேன். என் இனத்தைச் சேர்ந்த சிலர் குகைகளில் வசிக்கிறார்கள். வேறு சிலர் மரத்தின் அடியில் பள்ளம் தோண்டி அதில் வசிக்கிறார்கள்.

என் கண்களையும், காதுகளையும் விட, என் மூக்கைத்தான் நான் அதிகமாக நம்புகிறேன். எதிரிகள் வருவதையும்,உணவு எங்கே கிடைக்கும்

என்பதையும் என் மூக்குத்தான் எனக்கு அறிவிக்கிறது.

காட்டுக்குள்ளே சில சமயம் வேட்டைக்காரர்கள் வருவார்கள். அப்போது,'டப் டுப்' என்று துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்கும். சத்தம் கேட்டதும் எதிர்த் திசையிலே நான் வேகமாக ஓடுவேன். அப்போது நான் போடும் குட்டிக் கரணங்களுக்குக் கணக்கே இருக்காது.



எனக்கு இரண்டு குட்டிகள் உண்டு. சென்ற குளிர் காலத்திலே அவை பிறந்தன. சிலருக்கு மூன்று குட்டிகள் பிறப்பதும் உண்டு. என் குட்டிகள் சின்னஞ்சிறு குட்டிகள். அவை எப்போதும் என் முதுகிலே சவாரி செய்துகொண்டேயிருக்கும். நான் எவ்வளவுதான் வேகமாக ஓடினாலும் அவை கீழே விழுவதில்லை. அவைதான் என் முதுகிலுள்ள உரோமத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளுகின்றனவே ! எப்படிக் கீழே விழும்?

இரை கிடைக்கும்போது நான் அவைகளைக் கீழே இறக்கி விடுவேன். ஏதேனும் சத்தம் கேட்டால், அவை சட்டென்று என் முதுகிலே ஏறி அங்கேயே பத்திரமாக உட்கார்ந்துகொள்ளும். ஆபத்தென்று தெரிந்தால், நானும் உடனே குட்டிகளுடன் வேகமாக ஓடிவிடுவேன்.

நானும் என் குட்டிகளும் வெளிநாட்டைச் சேர்ந்தவர்களல்ல. இந்தியாவைச் சேர்ந்தவர்கள் தான். அதிலும் தென் இந்தியாவைச் சேர்ந்தவர்களே!

எங்களில் பல வகை உண்டு. ஹிமாலயக கரடி என்று கேள்விப்பட்டிருப்பீர்களே, அதுவும் என்னைப் போல் கறுப்பாகத்தான் இருக்கும். ஆனால், மார்பிலே V என்று வெள்ளையாக ஓர் அடையாளம் இருக்கும். வட துருவத்துக்குப் போனால், வெள்ளைக் கரடியைப் பார்க்கலாம். கரடிகளிலே பெரியது வெள்ளைக்கரடிதான். அதற்கு அடுத்தபடியாகச் சொல்லலாம், வட அமெரிக்காவில் உள்ள பழுப்புக் கரடியை. கண்ணாடிக் கரடி என்று ஒருவகை உண்டு. அதன் கண்களைச் சுற்றி வெள்ளையாக இருக்கும். அதனுடைய மார்பும் வெள்ளையாகவே இருக்கும். பார்த்தால், சர்க்கஸ் கோமாளி மாதிரியே இருக்கும்!

அந்தக் கண்ணாடிக் கரடியைப் பார்த்து விட்டுத்தான், நீங்கள் எங்கள் எல்லோரையுமே கோமாளிகளாக்கப் பார்க்கிறீர்கள் போலிருக்கிறது. சர்க்கஸ்காரர்களும், செப்படி வித்தைக்காரர்களும் எங்களைக் காட்டிலிருந்து பிடித்துக்கொண்டு

போய், குரங்கைப் போல் நன்ருகப் பழக்கி வித்தை காட்டுகிருர்களாமே! இது நியாயமா?

அவர்கள் என்னிடத்திலோ, என் குட்டிகளிடத்திலோ வந்து பார்க்கட்டும்; அப்போது என்ன நடக்கும் என்பதை இப்போது நான் சொல்லமாட்டேன். சொன்னுல், நீங்கள் வருத்தப்படுவீர்கள்!



## BOOKS TO WHICH THE AUTHOR IS INDEBTED


1. Animals in Africa ... L. S. B. Leakey
2. Kingdom of the Beasts ... Julian Huxley
3. The Wonder Book of Animals ... George Cansdale and others
4. Story Tales From Animal life ... Jacob J. Sessler
5. The Miracle of Life ... Harold Wheeler
6. Animals We know ... Bertha Morris Parker
7. Oxford Junior Encyclopaedia- Natural History ... Laura E Salt and Geoffrey Boumphrey
8. Animals of the World Series ... Edward Osmond
9. Wild Life of Our World ... John R Crossland and J. M. Parrish
10. The Children's Encyclopaedia ... Arthur Mee
11. Odhams Encyclopaedia For Children ... J. A. Lauwerys and R. W. Moore

